பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 09 திங்கட்கிழமை (25.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 272

# அறுதிப்பெரும்பான்மையுடன் அரச கூட்டமைப்பு வெற்றி!

## ஐ.தே.கவும் ஜே.வி.பியும் சகல தொகுதிகளிலும் தோல்வி

கொழும்பு, ஒகஸ்ட் 25

வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்காக நேற்றுமுன்தினம் நடந்த தேர்தலில் அரசுத் தரப்பு அறுதிப் பெரும்பான்மை யுடன் வெற்றியைப் பெற்றிருக்கின்றது. மொத்தமுள்ள 77 ஆசனங்களில் அரசின் ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பு மொத்தம் 45 ஆசனங்களை வென்றது

இரு மாகாண சபைகளையும் சேர்ந்த நான்கு மாவட்டங்களில் உள்ள தேர்தல் தொகுதிகளிலும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பி யும் படுதோல்வி அடைந்தன. ஒரு தொகுதியில்கூட மேற்படி இரு கட்சிகளும் வெற்றிபெறவில்லை. (12 ஆம் பக்கம் பார்க்க)

## துணுககாயில் ஷெல் வீச்சில் மூன்று படையினர் பலி!

கிளிநொச்சி, ஓக.25

முல்லைத்தீவு, துணுக்காய் பகுதியில் நிலை கொண்டிருக்கும் அரச படைகள் மீது நேற்றுமுன்தினம் தமிழீழவிடுதலைப் புலிகள் மேற்கொண்ட பீரங்கித் தாக்குத லில் 3 படையினர் கொல்லப்பட்ட னர். மேலும் மூவர் படுகாயமடைந்தனர் என்று படைத் தரப் பில் நேற்று அறிவிக் கப்பட்டது.

அன்றைய தினம் காலை 10.30 மணிய ளவில் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்கு தலில் படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் வெற்றியைத் தடுக்கும் சதித்திட்டத்துக்கு விழுந்த ஆப்பு இது!

### ஜனாதிபதி மஹிந்த பெருமிதம்



கொழும்பு,ஓக.25

வடமத்திய மற் றும் சப்ரகமுவமாகாண சபைத் தேர்தலில் அர சுக்குக்கிடைத்த வெற் றியின் ஊடாக பயங் கரவாத்திற்கு எதிரா கப் போராடும் படை யினரின் வெற்றி யைத் தடுக்கும் சிலரின் சதித்திட்டம் முறி யடிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேர்தல் வெற்றி குறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகா ணசபைத் தேர்தலில் அரசுக்குக் கிடைத்த வெற்றியானது தாய் நாட்டை நேசிக்கும் மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். இந்த வெற்றிக்குக் காரணமான மக்களுக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கி (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணத் தேர்தல்களில் அரசுக்குக் கிடைத்த வெற்றி இனவாதக் கருத்துகளுக்குக் கிடைத்த சன்மானம்

### தமிழ்க் கூட்டமைப்புக் கருத்து

கொழும்பு, ஒக். 25

''கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்ற வடக்கின் நிலப்பரப்புக்களைக் கைப்பற்றிவிட்டால் யுத்தத்துக்கு முடிவு காணலாம் என்ற மாயத் தோற்றத்திற்குப் பின்னால் சிங்கள மக்கள் இழுத்துச்செல லப்படுகின்றனர். இது பேரழிவுக்கு வழிவகுக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த தடவையுடன் ஒப்பிடும்போது ஐ.தே.கட்சிக்கு இது தோல்வியல்ல

### அத்தநாயக்க எம்.பி வியாக்கியானம்

கொழும்பு, ஓக. 25

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலுடன் ஒப்பிடுகையில், இம் முறை இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அமோக வெற்றியீட்டியுள்ளது என்று அக்கட்சி தெரிவி த்துள்ளது.

இது தொடர்பாக, ஐக்கிய தேசியக் கட்சி யின் பொதுச் செயலாளரும் எம்.பி.யுமான திஸ்ஸ அத்தநாயக்க கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர் தல் முடிவுகளின் அடிப்படையில், நாம அரசைவிட குறைவான ஆசனங்களைப் பெற்றுள்ளோம். ஆனால், அது தோல்வியல்ல.

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலுடன் ஒப்பிடுகையில், இத் தேர்தலில் நாம் வட மத்திய மாகாணத்தில் மேலதிகமாக 65 ஆயிரம் வாக்குகளையும், சப்ரகீ முவவில் ஒரு லட்சம் வாக்குகளை யும் பெற்றுள்ளோம்.

ஆனால், அரசு இத்தேர்தலில் மோசடி (12 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்து வரும் வாரங்களில் வன்னியில் போர் வெடிக்கும்?

### வடக்கில் பெரும் அழிவுகள் நேரலாம் என அச்சம்

கொழும்பு, ஓக.25

கிளிநொச்சியை நோக்கி இராணுவம் நகர்ந்து கொண்டிருப்பதால், எதிர் வரும் நாள்களில் தீவிரமான மோதலை யும், இரத்தக் களரியையும் நாடு எதிர் கொள்ள வேண்டியிருக்கும் என இராணுவ ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி ஏ.எவ். பி. செய்தி வெளியிட்டுள்ளது.

அரச படையினர் தமது மிக முக்கிய இலக்கான கிளிநொச்சியை நெருங்கும் வேளைகடுமையான சவாலை எதிர் கொள்ள வேண்டியிருக்கும் எனத் தெரிவித்துள்ள பாதுகாப்பு ஆய்வாளர்கள், இராணுவத்தின ரின் ஆட்டிலறி, விமான, பல்குழல் தாக்கு தல்களால் வடக்கில் பெரும் அழிவுகள் ஏற்படலாம் எனவும் எச்சரித்துள்ளனர்.

இராணுவம் கிளிநொச்சியை நெருங் கிவரும்வேளை அவர்கள் அதிகளவு காலாட் படையினரையே நம்பியிருக்க வேண்டிய நிலை காணப்படும் என ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி பிரிகேடியர் விமல் பொட்டேஜ் தெரிவித்துள்ளார். மிக நெருக் கமான சூழலில் இடம்பெறும் மோதலில் ஈடுபடும் நிலையை நோக்கி இரு தரப்பும் நகர்ந்து கொண்டுள்ளன எனவும் இந்தச் சூழ்நிலையிலேயே உயிரிழப்புகள் அதிக மாக ஏற்படலாம் என்றும் தெரிவித்துள்ளனர்.

இராணுவம் நவம்பர் மாதத்திற்கு முன் ன ர் கிளிநொச்சியைக் கைப்பற்ற முயல வேண்டும் எனத் தெரிவித்துள்ள பெயர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திடீர்ப் பொதுத் தேர்தல்? அரசு தீவிரமாக ஆராய்கிறது

கொழும்பு, ஓக. 25

வடமத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாணசபைத் தேர்தல்களில் காத்திரமான வெற்றியை ஈட்டியமையை அடுத்து, ஏனைய ஐந்து மாகாண சபைகளையும் கலைத்துவிட்டு அவற்றுக்குத் தேர்தல் நடத்துவது குறித்தும் -

பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்வது குறித்தும் -

அரசுத் தலைமை தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது என அரசுத் தலைமையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

கிழக்கு மாகாண சபைக்கு அண்மை யில் நடைபெற்ற தேர்தலில் அரசுத் தரப்பு சாதகமான வெற்றியை ஈட்டியிருந்தது.

வடக்கு மாகாண சபைக்குத் தனியான தேர்தல் ஒன்றை நடத்தக்கூடிய சூழல் அங்கு இல்லை என்பதும் தெரிந்ததே.

இந்த இரண்டு மாகாண சபைகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

## கலிகையில் புலிகளின் கொமாண்டோ அணி நடத்திய தாக்குதலில் படையினர் இருவர் பலி!

### நேற்று முழுநாளும் கடும் சோதனை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 25

கரவெட்டி, கலிகைப் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் மீது நேற்று அதி காலை 12.10 மணியளவில் விடுதலைப் புலிகளின் விசேட கொமாண்டோ அணியின திடீர் தாக்குதலைத் தொடுத்தனர். அதில் படைத்தரப்பைச் (12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வீட்டில் தனித்திருந்த தமிழ் மூதாட்டி கனடாவில் தீ விபத்தில் மரணம்

றொறண்டோ, ஓக.25

கனடாவின் ஸ்கார்பரோவில் உள்ள வீடு ஒன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் இலங்கையைச் சேர்ந்த தமிழ் மூதாட்டி ஒருவர் கடந்த வியாழக்கிழமை உயிரிழந்தார்.

றொரண்டோ, லோரன்ஸ் ஒழுங்கைக்கும் பிரிமரி வீதிக்கும் தென்கிழக்கே அமைந்துள்ள வீடு ஒன்றில் அவர் தனித்திருந்த வேளை தீ விபத்து இடம்பெற்றிருக்கிறது.

சிவா அழகேந்திரன் (வயது92) என்பவரே தீக்காயங்களுக்கு ஆளாகி உயிரிழந்தார் என்று அறியவந்துள்ளது.

பிள்ளைகள் வெளியில் சென்றிருந்த வேளை, மூதாட்டி மட்டும் தனியே வீட்டில் இருந்துள்ளார். அப்போது வீட்டில் தீப் பற்றியதாக சொல்லப்படுகின்றது.

கைத்தடி உதவியின்றி சுயமாக நடக்க முடியாத நிலையிலிருந்த அவர் தீ விபத்து ஏற்பட்ட போதிலும்வெளியேற முடியாத நிலையில் தீக் காயங்களுக்கு ஆளாகினார்.

தீயணைப்புப் படையினர் அவரை மீட்டு ஆஸ்பத்திரியில் அனுமதித்த போதிலும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர் அங்கு மரணமானார். (அ-1)


உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



இன்று

அகவை எண்பது காணும்

கலாபூஷணம்

சட்டத்தரணி

திரு.வை.ச.செந்தில்நாதன்

அவர்களை

வாழ்த்த வயதில்லை, வணங்கி மகிழ்கின்றோம்

உற்றார், உறவினர், நண்பர்கள்.


## உரும்பிராய் மயானத்தில் எலும்புகள் நிறைந்த உரப்பை மீட்பு

யாழ்ப்பாணம், ஓக.25

உரும்பிராய் பகுதியிலுள்ள மயானம் ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட எலும்புகள் நிறைந்த உரப்பை ஒன்றை கோப்பாய் பொலிஸார் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர். எலும்புகள் எரிந்த நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.நீதிவான் இ.வசந்தசேனன் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

மீட்கப்பட்டவை மனித எலும்புகளா அல்லது மிருக எலும்புகளா எனக் கண்டறிவதற்காக பரிசோதனை மேற்கொள்ள யாழ்.ஆஸ்பத்திரியில் அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-01-02-78)

## காணமற்போனவரின் சடலம் கிணற்றிலிருந்து நாரந்தனையில் மீட்பு

கடந்த வியாழக்கிழமை இரவு காணமற்போன குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் பாழடைந்த கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப் பட்டார்.

சரவணை மேற்கைச் சேர்ந்த எஸ். கோபாலகிருஷ்ணன் (வயது-56) என்பவரே நாரந்தனை பகுதியில் உள்ள கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

இவரது மரணம் தொடர்பாக ஊர்காவற்றுறை நீதிவான் மற்றும் பொலிஸார் நேற்று விசாரணைகளை மேற்கொண்டார். (அ-02)

## நிறைவு நாளும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஓக. 25

இயேசு சபை அகதிகள் பணியகத்தால் நடத்தப்பட்ட மகளிர் வாழ்வியற் பயிற்சிகளின் நிறைவு நாள் விழாவும் கண்காட்சியும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் தெற்கு றோ.க. வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

அருட்பணி பே.பெனிக்னஸ் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் பங்குத் தந்தை அருட்பணி எம்.எல். என்.குரூஸ் அடிகளாரும் கலந்துகொள்வர்.


SPOKEN ENGLISH DAY BY DAY

12 வாரகால பயிற்சி நெறி

VCD/ DVD/ CD- ROMS TICK- SOFT- விற்பனையில்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிவோர், வெளிநாடு பயணம் செல்வோர் ஆங்கில மொழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மிகவும் உகந்தது.

பின்வரும் புத்தக நிலையங்களில் பெறலாம்.

பூபாலசிங்கம்- யாழ். | அன்னை - யாழ். | ஆல் சிலோன் - யாழ்.



ராஜா 2 யாழ்ப்பாணம்



75 ஆவது நாளை நோக்கி

சகல

கமல்ஹாசன், அசின்

தசாவதாரம்

காட்சிகள் 10.30–2.00


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை உப அதிபர்

திருமதி உமாதேவி யோகானந்தா

அவர்களின் பாசமுள்ள தாய்



### திருமதி செல்லம்மா ஐயாத்துரை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை, நீர்வேலி.

(77445)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 ★ 09 ★ 1931



மறைவு 21 ★ 08 ★ 2003

### அமரர் பொன்னையா பாலசிங்கம்

(RETIRED SUPT. OF AUDIT)

அன்பாய்ப் பேசிபண்பாய் வாழ்ந்த - அப்பா!
ஆதரவு தந்து எமை அவனியிலே சிறப்புற வாழவைத்து
இவ்வுலகக் கடமை முடித்து அவ்வுலகு சென்ற - தந்தையே!
ஐந்தாண்டுத் திதியில் உமை நினைத்து வணங்குகிறோம்.

166/3, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## தவறிவிட்டது

ஸ்ரீராமச்சந்திரன் மயூலக்ஷன் என்பவரது தேசிய அடையாள அட்டை (910801651V), கல்லூரி அடையாள அட்டை ஆகியன 20.08.2008 அன்று திருநெல்வேலி கலாசாலை வீதியில் இருந்து நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் செல்லும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பழங்கிணற்றடிப் பிள்ளையார் கோயிலடி, கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்என்ற முகவரியில் ஒப்படைக்குமாறு தயவுடன் வேண்டுகின்றோம்.

## மணமகள்கள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1961 (Canada PR), 1971 (London PR), RC கௌரவ குடும்ப 1971 (London PR) மற்றும் ஓர் இந்து குடும்ப 1961 (Canada PR) லீவில் யாழ் வந்து நிற்கும் மேற்படி மணமகன்களை நேரில் பார்த்துப் பேசவும், அவர்கள் விவரங்களைப் பெறவும் உங்கள் விவரங்களைக் கொடுக்கவும்.

VIJAI (ஊட்டி)

இல. 117, [illegible]
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 0771606515
[illegible]
land phone நம்பர் தருவோம்.

## கண்ணீர் அஞ்சலி



கல்பனா பேக்கரி உரிமையாளர்
அவர்களின் அன்புத் தந்தை

### நாகன் வேலன் (சின்னப்பு)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,
நல்லூர்/ கோப்பாய் கிளை அங்கத்தவர்கள்.

(77451)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

இகத்தினில் 31 ★ 07 ★ 1924 (கந்தர்மடம்)



பரத்தினில் 26 ★ 07 ★ 2008 (உடுவில்)

### அமரர் தில்லையம்பலம் பஞ்சாட்சரம்

26.07.2008 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.08.2008) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள்; மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சோமராம் தோட்டம்,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(77449)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை கார்த்திகேசு



அச்செழுவைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கார்த்திகேசு நேற்று (24.08.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்புப் புதல்வனும், பூமணியின் அன்புக் கணவரும், லெனின் (லண்டன்), தவதாஸ் (M.P.C.S. - நீர்வேலி), தர்மகுலம், யமுனா, கங்கா ஆகியோரின் தந்தையும், கருணாவதி (லண்டன்), றஞ்சினி, காலஞ்சென்ற விஜயராசா ஆகியோரின் மாமனாரும், டாசின், டசீவன், பகீர், தனு, லக்சன், கேமா, கஜா, யசோதரன், சஞ்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2008) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(77443)

தகவல்:
தவதாஸ் (மகன்).

### அம்பலவாணர் செல்வராசா (பூதர்)



அச்செழுவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் செல்வராசா நேற்று (24.08.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்- ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்- அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் நகுலாதேவியின் அன்புக் கணவரும், வளர்மதி(ஆசிரியை, யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), அருந்ததி(ஆசிரியை, யா/ புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி), செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரன், யோகலிங்கம்(மனேஜர், வலி.கிழ.தென்பகுதி எரிபொருள் விற்பனை நிலையம், கோப்பாய்), சுகிர்தா ஆகியோரின் அன்பு மாமனும், ஆரணிகா, அபிராமி, சிவகாமி, வனோஜன், மதுசியா, சாருஜா, நிலோஜன், சாம்பவி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லாச்சிப்பிள்ளை, மனோன்மணி, இராசலட்சுமி, அருள்நேசவாசன், இராசசேகரம் மற்றும் சறோஜினிதேவி, கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரனும், சண்முகநாதன், ஐயாத்துரை, மனோன்மணி, மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி, கனகசபை மற்றும் கமலநாதன், விமலாதேவி, விமலநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2008) திங்கட்கிழமை ந.ப 12மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பூதர் வளவு,
அச்செழு,
நீர்வேலி.

(77450)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம்,ஓக.25

தீவகக் கல்வி வலயத்தில் இரு பாடசாலைகளுக்கு அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மண்கும்பான் அ.த.க. பாடசாலை, மெலிஞ்சிமுனை றோ.க.த.க ஆகிய பாடசாலைகளின் அதிபர் பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை தீவக கல்வி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## இணையம், மின்னஞ்சல் பயிற்சிகள்

மந்திகை,ஓக.25

வடமராட்சி வலயக் கல்வித்திணைக்களத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவள நிலையத்தில் இணையம், மின்னஞ்சல் பயிற்சிநெறிகள் நடத்தப்படவுள்ளன. (202-218)

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.25

தெல்லிப்பழை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கூட்டம் கடந்த 19 ஆம் திகதி நடைபெறவிருந்து ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202)

## கோப்பாய் பிரதேசத்தின் 40 பயனாளிகளுக்கு கோழிக் குஞ்சுகள் விநியோகம்

கோப்பாய்,ஓக.25

கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் 40 பயனாளிகளுக்கு தலா 10 கோழிக் குஞ்சுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் வியாழக்கிழமை கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் வைத்து இக் கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

கோழி வளர்ப்பு தொடர்பான பயிற்சி பெற்ற பயனாளிகளுக்கே 'எவ்ஏஓ' நிறுவனத்தின் அனுசரணையுடன் இக் கோழிக் குஞ்சுகள் வழங்கப்படவுள்ளன எனபிரதேச கால்நடை வைத்திய அதிகாரி திருமதி ச. மகேந்திரராஜா தெரிவித்தார். (202-72)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## ஆயுள்வேத அலுவலர்களுக்கு தடைதாண்டல் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்.மாவட்டத்திலுள்ள ஆயுள்வேத வைத்தியசேவை அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு எழுத்துப் பரீட்சையும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சிங்கள வாய்மொழிப் பரீட்சையும் நடைபெறவுள்ளன.

மேலதிக விவரங்களை யாழ். மேலதிக அரச அதிபருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (202)

# பாடசாலைகளின் குறிப்பிட்ட வகுப்புகளுக்கு தேசிய மட்டத்திலேயே 3 ஆம் தவணைப் பரீட்சை

அச்சுவேலி, ஓக.25

பாடசாலைகளின் தரம் 6, தரம் 7, தரம்10, தரம் 11 ஆகிய வகுப்புகளுக்கு மூன்றாம் தவணைப் பரீட்சை தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலைக் கணிப்பீட்டையும் தவணைப் பரீட்சையையும் ஒன்றிணைக்கும் முன்னோடி செயல்திட்டத்தின் அடிப்படையில் தெரிவுப் பாடங்கள் தவிர்ந்த ஏனைய பிரதான பாடங்கள் ஆறுக்குமான பரீட்சைகள் தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ளன.

பரீட்சைக்கான வினாப்பத்திரங்கள் மாகாணக் கல்வித் திணைக்களங்கள் மற்றும் மாகாணமட்டத் திணைக்கள ஆலோசனையுடன் தேசிய கல்வி நிறுவகம், மத்திய கல்வி அமைச்சு என்பனவற்றின் வழிப்படுத்தலுடன் பொதுமைப்படுத்தப்பட்ட குழுவினால் தயாரிக்கப்படும். பரீட்சைக்கான நேர அட்டவணையும் தேசிய மட்டத்தில் ஒரேவகையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தரம் 6, தரம் 7, தரம் 10, தரம்11 வகுப்புக்களுக்கு தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம், சமயம் ஆகிய ஆறு பாடங்களுமே தேசிய மட்டத்தில் நடைபெறும்.

பரீட்சைகள் நவம்பர் மூன்றாம் வாரத்துக்குள் முடிவடையும்.

விடைத் தாள்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் கல்வி வலய மற்றும் மாவட்ட மட்டத்தில் குழு நிலையில் அதிகாரிகள் கண்காணிப்பில் நடைபெறும். பரீட்சை புள்ளிகள் தேசிய மட்டத்தில் ஒன்று சேர்க்கப்பட்டு, பெறுபேறுகள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பாடசாலைக் கணிப்பீட்டிற்கும், தவணைப் பரீட்சைக்கும் தொடர்புகள் நெருக்கமாக இருப்பதுடன் நவீன கற்பித்தல் உத்திகள் தேசிய ரீதியில் எந்த வகையில் கையாளப்படுகின்றன என்பதை மதிப்பீடு செய்வதற்கும், பொருத்தமான பின்னூட்டல்களை மேற்கொள்வதற்கும் ஏற்புடையதாக 'பாடசாலை கணிப்பீட்டையும் தவணைப் பரீட்சையையும் ஒன்றிணைக்கும் செயற்றிட்டம்' எதிர்காலத்தில் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (202-11)

### தேச நிர்மாண உட்கட்டமைப்பு அமைச்சின்—

# இடைநிறுத்தப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்களை இவ்வருடம் நிறைவேற்றுவதற்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஓக.25

தேச நிர்மாண தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் 'மகிந்த சிந்தனை', மற்றும் துரித அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றில் கடந்த வருடம் மேற்கொள்ளப்படவிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களை இவ்வருடம் நிறைவேற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத் திட்டங்களுக்கான நிதி கிடைக்காததால் நிறுத்தப்பட்ட வேலைத் திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் தென்மராட்சிப் பிரதேசத் தில் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சுட்டிபுரம், நாவற்காடு, மிருசுவில் வீதி, நாவற்குழி மேற்கில் நெல் வயற் பகுதியில் உள்ள குளங்களை ஒன்றிணைக்கும் வடிகால் அமைத்தல், சாவச்சேரி கலாசார மண்டப நிர்மாணம்-கட்டம்4 ஆகியவையும்-

மகிந்த சிந்தனை அபிவிருத்தித் திட்டத்தில் மட்டுவில் மேற்கு நெசவு நிலைய வீதி, நுணாவில் மேற்கு காந்தாயாம்பிட்டி வீதியில் பெட்டி மதகு அமைத்தல், மத்திய வீதி, விக்னேஸ்வரா பாடசாலை வீதி, வளர்மதி வீதி ஆகியவை அமைத்தல், வேலைத் திட்டங்களையும் மேற்கொள்ளுமாறு அறிவிக்கபட்டுள்ளது. (202-207)

# மாரீசன்கூடல் றோ.க.த.க.பாடசாலையில் தரம் 6 வகுப்பை ஆரம்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.25

மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலை யில் மாணவர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டும்பிரதேச மாணவர்களின்வசதியைக் கருத்தில் கொண்டும், தரம் 6 வகுப்பு ஆரம்பிக்கப்பட வேண்டும் எனப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் மகஜர் மூலம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1880 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையில் 1997 ஆம் ஆண்டு வரை தரம் 8 வரையான வகுப்புகள் நடத்தப்பட்டு வந்தன. இடப்பெயர்வால் மாணவர் எண்ணிக்கை குறைவடைந்ததை அடுத்து 1998 முதல் தரம் 5 வரை மட்டுமே வகுப் புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தற்போது மாணவர் எண்ணிக்கை 136 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் தரம் 5 புலமைப் பரீட்சையிலும் தொடர்ச்சியாக மாணவர்கள் சித்தியடைந்து வருகின்றனர்.

இப்பாடசாலையிலிருந்து தரம் 5 உடன் வெளியேறும் மாணவர்கள் பலர் வறுமை காரணமாகவும் 3 கிலோ மீற்றருக்கு தொலைவில் தரம் 6 வகுப்புள்ள பாடசாலைக்குச் செல்லவேண்டியதாலும் தமது கல்வியை இடைநிறுத்தும் நிலை ஏற்படுகின்றது.

இந் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அடுத்த கல்வியாண்டில் இருந்து இப் பாடசாலையில் தரம் 6 வகுப்பை ஆரம் பிக்க அனுமதி வழங்க வேண்டும் என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (202)

## கோப்பாய்ப் பிரிவுக்கு கால்நடை போதனாசிரியர்

கோப்பாய்,ஓக.5

கோப்பாய் கால்நடை வைத்திய அலுவலக பிரிவின் அச்சுவேலி உப அலுவலகப் பிரிவிற்கு இன்று திங்கட்கிழமை தொடக்கம் முழு நேரப் பணிக்கு கால்நடை அபிவிருத்தி போதனாசிரியராக ந. சத்திய வாகிஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்மூலம் இப்பிரதேச கால்நடை வளர்ப்பாளர்களுக்குப் கால்நடை வளர்ப்பு சம்பந்தமானபல்வேறு தகவல்களை இலகுவில் பெற வழியேற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (202-72)

## பண்ணாகம் முருகமூர்த்தி ஆலயத்திற்கு இராஜகோபுரம்

சுழிபுரம்,ஓக.25

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலயத்திற்கு இராஜகோபுரம் அமைக்கப்படவுள்ளது.

இப் பணிக்கென ஆலய பரிபாலன சபை நிர்வாகத்தினர் உட்பட 15 பேர் கொண்ட சபை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கோபுரத்திற்கான அடித்தள வேலைகள் 2001 ஆம் ஆண்டில் பூர்த்தி யாக்கப்பட்டன. மேல்தள வேலைகளே மேற்கொள்ளப்படவுள்ளன.

## மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட 3 வீதிகள் புனரமைப்பு

நவாலி,ஓக.25

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட 3 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

ஆனைக்கோட்டை அரசினர் வைத்தியசாலை வீதி, நவாலி அந்திரான் முருகமூர்த்தி வீதி, மானிப்பாய் செல்லமுத்து வீதி என்பனவே புனரமைக்கப்படவுள்ளன.

இப் புனரமைப்பிற்கான நடவடிக்கைகளை மானிப்பாய் பிரதேசசபைச் செயலாளர் பு. சிவ லிங்கம் மேற்கொண்டுள்ளார். (202-100)

## அமைய அடிப்படையில் பணியாற்ற ஊழியர் தெரிவுக்கு நேர்முகத் தேர்வு

வடமராட்சி,ஓக.25

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் இயங்கிவரும் 'விதாதா' வள நிலையத்தில், அமைய அடிப்படையில் பணியாற்றுவதற்கான ஊழியர்களைத் தெரிவுசெய்வதற்கென விஞ்ஞானத் தொழில்நுட்ப அமைச்சால் நேர்முகத் தேர்வு அண்மையில் நடத்தப்பட்டுள்ளது.

வெளிக்களகட்ட இணைப்பாளர், தரப்பதிவு அலுவலர், அலுவலக உதவியாளர் ஆகிய பதவிகளுக்கே இந்த நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. (203-236)

## நெற்பயிர்களுக்கு காப்புறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஓக.25

தென்மராட்சி பிரதேசத்தில் இவ்வருடம் காலபோக நெற்செய்கை மேற்கொள்வோர் நெற்பயிர்களுக்கு காப்புறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கமத்தொழில் திணைக்கள காப்புறுதி உதவிப் பணிப்பாளர் இந்த அறிவுறுத் தலை விடுத்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் ரூபா 200 செலுத்தி பயிர்க் காப்புறுதி செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார். (202-207)

## வலிகாமம் வலயத்தில் தற்காலிகமாக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கு சம்பளம்

யாழ்ப்பாணம்,ஓக.25

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் ஆசிரியர்களை ஓகஸ்ட் மாதச் சம்பளக்கொடுப்பனவுப் பட்டியலில் எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் கையொப்பமிடுமாறு வலயக் கணக்காளர் கேட்டுள்ளார். (202)

## சுழிபுரம் வைத்தியசாலை பொன்விழா மலர் வெளியீடு

சுழிபுரம்,ஓக.25

சுழிபுரம் பிரதேச சபை ஆயுள்வேத வைத்தியசாலையின் பொன்விழா நிறைவையொட்டி விழா மலர் வெளியிடப்படவுள்ளது.

வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில்கடமையாற்றிய வைத்தியர் அமரர் ஏ. கைலாசபிள்ளை முதல் இன்று கடமையாற்றும் வைத்தியர் பரமசிவம் பிள்ளை வரையான 10க்கு மேற்பட்ட வைத்தியர்களின் சேவை குறித்த விவரங்கள் இம் மலரில் இடம்பெறவுள்ளன. (202-28)

## கப்பல் பயணத்தில் தவறவிடப்பட்ட விரிப்புகள் மல்லாகம் நீதிமன்றில்

யாழ்ப்பாணம்,ஓக.25

கப்பல் பயணத்தின்போது பயணிகளால் தவறவிடப்பட்ட குழந்தைகளுக்கான விரிப்புகள் தெல்லிப்பழை பொலிசாரால் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் வேலை நாள்களில் நீதிமன்றப் பதிவாளரிடம்வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.




இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளை மேற்றரக் கிளையாகத் தரம் உயர்த்தப்பட்டமையை முன்னிட்டு உத்தியோகத்தர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது.

இளைப்பாறிய செயற்பாட்டு முகாமையாளர் க. பாலசிங்கம், [illegible] ரி. புவனேந்திரன் ஆகியோருக்கு வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம் நினைவுப் பரிசில்கள் வழங்குவதைப் படங்களில் காணலாம்.

கிளை முகாமையாளர் எஸ்.பி. அரசகுமார், வட மாகாண செயற்பாட்டு முகாமையார் என். சிவரட்ணம் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவுக்கே முதலிடம்

ஜிங் ஒலிம்பிக் போட்டிகள் நேற்று லாகலமாக நிறைவடைந்தன. கடந்த 8 ம் திகதி பிரமிக்க வைக்கும் ஆரம்ப வபவத்துடன் ஆரம்பமான 29 ஆவது லிம்பிக் போட்டிகள் 16 நாள்கள் வெகு றப்பாக நடைபெற்று முடிவுக்கு வந்தன.



பதக்கப்பட்டியல் வரிசையில் சீனா முதல் முறையாக அமெரிக்கா உட்பட எல்லா நாடுகளையும் பின்தள்ளி முதலாம் இடத்தைத் தட்டியிருக்கின்றது.

தனது நாட்டில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்காக பல வருடங்களாகப் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்து ஆரம்ப தினத்தன்று உலகையே ஆச்சரியத்தில் திளைக்க வைத்த சீனர்கள், சொந்த நாட்டில் போட்டிகளிலும் ஒட்டுமொத்த முன்னிலை வகித்து அசத்தினர்.

முன்னதாக தடகளம் அல்லாத - வெளி நிலைப் போட்டிகளில் அதிக தங்கப்பதக்கங்களைக் கைப்பற்றி சீனா முதலிடம் வகித்த போது, தடகளத்தில் அமெரிக்கா தங்கங்களை அள்ளிக் குவித்து சீனாவைப் பின்தள்ளும் என்று விளையாட்டுத்துறை ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர்.

இருந்தாலும் அதனை தடகளத்திலும் தாங்கள் சளைத்தவர்கள் அல்லர் என்று சீனா காட்டிய மூர்க்கமும், ஜமைக்கா, எதியோப்பியா, கென்யா போன்ற நாடுகள் இம்முறை எடுத்த விஸ்வரூபமும் அமெரிக்காவைத் தலையெடுக்க விடாமல் தடுத்து விட்டன.

இம்முறை உலகின் கவனத்தை ஒட்டுமொத்தமாக ஈர்த்த வீரர்களில் முக்கியமானவர் அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ். தான் பங்கேற்ற 8 நீச்சல் போட்டிகளிலும் தங்கம் வென்று ஒலிம்பிக்கில் புதிய முத்திரை பதித்தார் அவர். பெல்ப்ஸுக்கு அடுத்தபடியாக ஜமைக்காவின் குறுந்தூர ஓட்டப் போட்டியைக் குறிப்பிடலாம். 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டங்களில் புதிய உலக சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்றார் அவர்.


10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள், வீராங்கனைகள் போட்டிகளில் களம் இறங்கினர்.

இந்த முறை பதக்கப் பட்டியலில் 86 நாடுகள் இடம்பெற்று சாதனை படைத்துள்ளன. 2000 ஆம் ஆண்டு சிட்னியில் நடந்த ஒலிம்பிக்கில் 80 நாடுகள் பதக்கம் பெற்றதே சாதனையாக இருந்தது. தற்போது 6 நாடுகள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. மொரிஷியஸ், அயர்லாந்து, மால்டோவா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளும் பட்டியலில் இடம் பிடித்துள்ளன. கடந்த ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் 74 நாடுகள் பதக்கம் பெற்று இருந்தன.

'பறவைக் கூடு' என அழைக்கப்படும் பெஜிங் நேஷனல் ஸ்டேடியத்தில் இந்திய நேரப்படி மாலை 5.30 மணிக்கு நிறைவு நிகழ்ச்சிகள் தொடங்கின.

சீனப் பாரம்பரியத்தை பறைசாற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் போட்டியில் பங்கேற்ற நாடுகளின் அணிவகுப்பு நடைபெற்றது. அடுத்த ஒலிம்பிக் போட்டியை நடத்தும் இங்கிலாந்துக்கு சர்வதேச ஒலிம்பிக் கொடியைக் கொடுக்கும் நிகழ்ச்சி முக்கியத்துவம் பெற்றது.

பிரிட்டிஷ் பாடகர் லியானோ லீவிஸின் இசை நிகழ்ச்சிக்கு இடையே லண்டன் மேயர்




ஜோன்சனிடம் பெய்ஜிங் மேயர் குவோ ஜின்லாங் சர்வதேச ஒலிம்பிக் கொடியை வழங்கினார்.

அதிகமான வீரர், வீராங்கனைகளை இப்போட்டிக்கு அனுப்பிய பெருமையை சீனாவும், அமெரிக்காவும் பெற்றன. போட்டியை நடத்தும் சீனா 639 வீரர்களையும், அமெரிக்கா 596 வீரர்களையும் அனுப்பியிருந்தன. அதேபோல் அவ்விரு நாடுகளே பதக்கப் பட்டியலில் முதல் 2 இடங்களைப் பிடித் துள்ளன.

## ஒலிம்பிக் கால்பந்தாட்டத்தில் ஆர்ஜென்டினா சம்பியன்



பீஜீங் ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் ஆர்ஜென்டீன அணி தங்கப்பதக்கத்தை வென்றுள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நைஜீரிய அணியை 10 விகிதத்தில் ஆர்ஜென்டீன அணி தோற்கடித்தது.

58ஆவது நிமிடத்தில் ஏஞ்சல் டி மரியா இப்போட்டியின் ஒரேயொரு கோலை அடித்தார். 2004ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் கால்பந்தாட்டப் போட்டியிலும் ஆர்ஜென்டீனா அணியே தங்கப் பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. 1996ஆம் ஆண்டு ஒலிம்பிக் கால்பந்தாட்ட இறுதிப் போட்டியில் ஆர்ஜென்டீனாவை அதிர்ச்சிகரமாக தோற்கடித்து நைஜீரியா அணி சம்பியனாகியிருந்து. இதே வேளை வெள்ளிக்கிழமை நடைபெற்ற வெண்கலப் பதக்கத்திற்கான போட்டியில் பெல்ஜிய அணியை பிரேஸில் அணி தோற்கடித்தது.

Beijing 2008

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

(நேற்று மாலை வரையானது)

| நிலை | நாடு | தங். | வெள். | வெண். | மொ. |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 51 | 21 | 28 | 100 |
| 2 | அமெரிக்கா | 36 | 38 | 36 | 110 |
| 3 | ரஷ்யா | 23 | 21 | 28 | 72 |
| 4 | பிரிட்டன் | 19 | 13 | 15 | 47 |
| 5 | ஜேர்மனி | 16 | 10 | 15 | 41 |
| 6 | ஆஸ்திரேலியா | 14 | 15 | 17 | 46 |
| 7 | கொரியா | 13 | 10 | 08 | 31 |
| 8 | ஜப்பான் | 09 | 06 | 10 | 25 |
| 9 | இத்தாலி | 08 | 10 | 10 | 28 |
| 10 | பிரான்ஸ் | 07 | 16 | 17 | 40 |
| 11 | உக்ரைன் | 07 | 05 | 15 | 27 |
| 12 | நெதர்லாந்து | 07 | 05 | 04 | 16 |
| 13 | ஜமெய்க்கா | 06 | 03 | 02 | 11 |
| 14 | ஸ்பெயின் | 05 | 10 | 03 | 18 |
| 15 | கென்யா | 05 | 05 | 04 | 14 |
| 16 | பெலாரஷ் | 04 | 05 | 10 | 19 |
| 17 | ருமோனியா | 04 | 01 | 03 | 08 |
| 18 | எதியோப்பியா | 04 | 01 | 02 | 07 |
| 19 | கடனா | 03 | 09 | 06 | 18 |
| 20 | போலாந்து | 03 | 06 | 01 | 10 |
| 21 | ஹங்கேரி | 03 | 05 | 02 | 10 |
| 21 | நோர்வே | 03 | 05 | 02 | 10 |
| 23 | பிறேசில் | 03 | 04 | 08 | 05 |
| 24 | செக் | 03 | 03 | 00 | 06 |
| 25 | சுலோவர்க்கியா | 03 | 02 | 01 | 06 |
| 26 | நியூசிலாந்து | 03 | 01 | 05 | 09 |
| 27 | ஜோர்ஜியா | 03 | 00 | 03 | 06 |
| 28 | கியூபா | 02 | 11 | 11 | 24 |
| 29 | கஸகஸ்தான் | 02 | 04 | 07 | 13 |
| 30 | டென்மார்க் | 02 | 04 | 03 | 07 |

## 3 பதக்கங்களுடன் இந்தியா திருப்தி



அபிநவ் பிந்திரா சுஷில்குமார் விஜேந்தர்குமார்

56 ஆண்டுகளுக்கு பின்னர் தங்கம் உட்பட 3 பதக்கங்களை வென்று இந்தியா அசத்தியது.

108 ஆண்டுகால ஒலிம்பிக் வரலாற்றில் முதல் முறையாக தனிநபர் தங்கம் வென்றார் அபிநவ் பிந்த்ரா.

பதக்கப்பட்டியலில் சீனா முதலிடத்தில் இருந்தாலும், அதிக பதக்கங்களை அமெரிக்கா குவித்தது. நீச்சலில் அமெரிக்க வீரர் பெல்ப்ஸ் 8 தங்கம் வென்று சரித்திரம் படைத்தார்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் ஒலிம்பிக் போட்டி, சீன தலைநகர் பீய்ஜிங்கில் இம்மாதம் கடந்த 8ஆம் திகதி தொடங்கியது. இதில் 204 நாடுகளை சேர்ந்த பத்தாயிரத்துக்கும் அதிகமான வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

• ரத்தோர் தலைமையில் 56 வீரர், வீராங்கனைகள் அடங்கிய இந்திய அணி களமிறங்கியது.

இவர்கள் வில்வித்தை, தடகளம், இறகுபந்து, குத்துச்சண்ட , ஜூடோ, துடுப்புபடகு, பாய்மரப்படகு, துப்பாக்கிசுடுதல், நீச்சல், டேபிள் டென்னிஸ், மல்யுத்தம், டென்னிஸ் ஆகிய 12 விளையாட்டுகளில் பங்கேற்றனர். சனிக்கிழமையுடன் இந்திய வீரர்கள் பங்கேற்ற எல்லா போட்டிகளும் முடிந்தன.

இந்தியா இம்முறை ஒரு தங்கம் 2 வெண்கலம் என மொத்தம் 3 பதக்கங்களுடன் ஒலிம்பிக் போட்டிகளை நிறைவு செய்துள்ளது. துப்பாக்கி சுடுதலில் 10 மீற்றர் ஏர்ரைபிளில் அபிநவ் பிந்த்ரா தங்கம் வென்றார். 108 ஆண்டுகால ஒலிம்பிக் வரலாற்றில் முதல்முறையாக தனிநபர் தங்கம் வென்றார் அபிநவ்.

மல்யுத்தத்தில் 60 எடை பிரிவில் சுஷில்குமார் வெண்கலத்தையும், குத்துச்சண்டையில் மிடில் வெயிட் பிரிவில் விஜேந்தர்குமார் வெண்கலத்தையும் பெற்றனர்.

1900ஆம் ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து பங்கேற்று வந்துள்ள இந்தியா அதிகபட்சமாக 1952இல் இரண்டு பதக்கங்களை வென்றிருந்தது. அந்தப் போட்டியில் ஹாக்கியில் தங்கத்தையும், மல்யுத்தத்தில் வெண்கலத்தையும் இந்தியா பெற்றிருந்தது. 56 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது பீஜிங் ஒலிம்பிக்கில் இந்தியா 3 பதக்கங்கள் வென்று அசத்தியது.

எனினும் பதக்கம் வெல்வார்கள் என்று அதிகம் எதிர்பார்த்த ரத்தோர், லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி, சானியாமிர்சா, சாய்னா நெஹ்வால், அஞ்சு ஜார்ஜ் ஆகியோர் இந்த முறை ஏமாற்றம் அளித்தனர்.

## 'பாதணியை காட்சிப்படுத்துமாறு நாம் கோரவில்லை'



பீஜிங் ஒலிம்பிக்கில் உலக சாதனைகளுடன் மூன்று தங்கப் பதக்கங்களை வென்ற ஜமைக்காவில் குறுந்தூர ஓட் வீரர் உசைன் போல்ட்டிற்கு தடகளத்துறையிலிருந்து மட்டுமல்ல, கிரிக்கெட் வீரர்களிடமிருந்தும் பாராட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன. குறுந்தூர ஓட்டத்துறையில் உசைனுக்கு நிகரான வேறொருவரை,சுட்டிக் காட்டுவதற்கு முடியவில்லை என்றார் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் வோ.

உசைன் போல்ட் போன்ற நட்சத்திர வீரர்கள் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றவுடன் காலணியை கழற்றி காட்சிப்படுத்துமாறு அவர்களைக் கோரவில்லை என பிரபல விளையாட்டு பொருள்கள் தயாரிப்பு நிறுவனமான பியூமா தெரிவித்துள்ளது.

ஜமைக்கா குறுந்தூர ஓட்ட வீரர் உசைன் போல்ட் 100 மீற்றர், 200 மீற்றர் இறுதிப் போட்டிகளில் முதலிடம் பெற்றபின் தனது பாதணிகளை ஓட்டக்களத்தில் கழற்றி வைத்துவிட்டு நடனமாடினார். ஒவ்வொரு போட்டிக்குமான வெவ்வேறு ஜோடி பாதணிகளை போல்ட் பயன்படுத்தினார். அவற்றில் எந்தப் போட்டிக்கு எந்தப் பாதணி என்பதும் உசைனின் செல்லப்பெயரான "உகோ" என்பதும் பொறிக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு போட்டி முடிந்தவுடனும் தனது பாதணிகளை கவனமாக கழற்றி படப்பிடிப்பாளர்கள் முன்னிலையில் அவற்றை முத்தமிட்டதும் ஓட்டப்பாதையில் காட்சிக்கு வைத்ததும் பியூமா நிறுவனத்தின் விளம்பர உத்தியாக இருக்கலாம் என சிலர் விமர்சித்திருந்தனர்.

ஆனால் அப்படிச் செய்யுமாறு தாம் உசைனையோ ஏனைய போட்டியாளர்களையோ கோரவில்லை என பியூமா நிறுவனம் கூறுகின்றது.

அந்நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜோசென் ஸெய்ட்ஸ் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், பாதணிகளைக் காட்சிப் படுத்துமாறு நாம் கோரவில்லை. ஆனால் உசைன் ஏன் அப்படி செய்தார் என்றால், அவர் தன்னை பியூமாவுடன் இணைத்து அடையாளப்படுத்த விரும்புகிறார்.

அவரை ஒலிம்பிக் போட்டியில் ஹீரோவாகுவதற்காக நாம் செய்தவற்றை அவர் மதிக்கிறார். அவை இல்லாவிட்டால் தனது திட்டங்களை பூர்த்தி செய்திருக்க முடியாது என அவர் உணர்ந்ததால் அப்படி நடந்து கொண்டிருக்கலாம் - என்றார்.

## கென்யாவுக்கு முதல் மராத்தான் தங்கம்



ஒலிம்பிக் போட்டியில் மராத்தான் ஓட்டப் பந்தயத்தில் தங்கப்பதக்கத்தை கென்ய வீரர் சாமி வஞ்சிரு வென்றுள்ளார். இதன் மூலம் கென்யாவுக்கு முதல் மராத்தான் தங்கப்பதக்கத்தை அவர் பெற்றுக் கொடுத்துள்ளார்.

கடைசி நாளான நேற்று ஒலிம்பிக் விளையாட்டின் உச்சம் என்று கருதப்படும் மராத்தான் ஓட்டப்பந்தயம் நடைபெற்றது.

பீஜிங் நகரில் உள்ள புகழ்பெற்ற தியானமன் சதுக்கத்தில் இருந்து இந்த ஓட்டம் தொடங்கியது. நூற்றுக்கும் மேற்பட்ட வீரர்கள் இதில் பங்கேற்றனர். இந்த ஓட்டப் பந்தயம் பீஜிங் போட்டிகளின் முக்கிய அரங்கான பேர்ட்ஸ் நெஸ்ட் ஸ்டேடியத்தில் நிறைவடைந்தது.

ஸ்டேடியத்திற்குள் மராத்தான் வீரர்கள் நுழைந்ததுமே ரசிகர்கள் மிகுந்த ஆரவாரத்தோடு அவர்களை வரவேற்றனர். கென்ய வீரர் சாமி வஞ்ஜிரு முதலாவதாக வந்து தங்கப்பதக்கத்தை கைப் பற்றினார். அவர் 2 மணி நேரம் 6 நிமிடம் 32 நொடிகளில் வெற்றிக்கோட்டை தொட்டு புதிய ஒலிம்பிக் சாதனையைப் பெற்றார். இதன் மூலம் கென்யாவுக்கு அவர் முதல் மராத்தான் தங்கப்பதக் கத்தை பெற்றுத் தந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் தனது மனதை கடவுளுக்குரிய மலராக மாற்றினாலேயே துன்பங்களில் இருந்து விடிவு

## கைலாசவாகனம் புகட்டும் புத்திமதி இது

இன்று நல்லைக் கந்தனுக்கு கைலாசவாகனம்.

இந்துப்பூமிமுட்களும்புதர்களும் நிறைந்த கலியுக நிலையில் இருக்கின்றது. இங்குள்ளவை மனிதனுக்கு தீங்கு விளைவிப்பனவாக ஒவ்வாத சமுதாய நிலையாகவும் காணப்படுகின்றது.

அசுரசமுதாய நிலையில் இருந்து உகந்த சமுதாய நிலைக்கு வருவதாயின் எண்ணம், மனோ நிலை உணர்வுகள் செயல்களில் இருந்து நாம் சுர சமுதாயமாக மாற்றமடைய வேண்டும் என்பதே கருத்து.

கைலாச வாகனத்தில் முன் புறத்தில் இராவணனது உருவமும் அடியில் கூர்மமும் அதாவது ஆமையும் காணப்படுகின்றன. அதன் மேலே கந்தப்பெருமான் முருக நிலையில் இருந்து தவம் செய்கிறான். இராவணன் என்பது 10 தலை 20 கரம் கொண்ட உருவமாகச் சித்திரிக்கப்பட்டாலும் எம்மிடையே உள்ள தீய குணங்களான காமம், குரோதம், கோபம், மோகம், அகங்காரம் ஆகிய ஐந்து ஆண் விகாரங்களையும் பொறாமை, அச்சம், மடமை, நாணம், பயிர்ப்பு ஆகிய பெண் விவகாரங்களையும் குறித்து நிற்கின்றன. இதுவே இப்பொழுது இராவண நிலையில் இருக்கும் அசுரத்தனமான செயல்களுக்குக் காரணம்.


இதன்கீழ் இருக்கும் கூர்மமாகிய ஆமை குறிப்பது ஐந்துகள் வர்களாகிய ஐம்புலன்களே ஆகும். சரீர உணர்விற்கு வரக்காரணமாக அமைவன ஐம்புலன்களாகும். ஆமை எவ்வாறு நான்கு கால்களையும் தலையையும் உள்ளொடுத்து இருக்குமோ அது போன்று நாமும் ஐம்புலன் உணர்வுகளையும் கட்டுப்படுத்தி இருப்போமானால் எமது சரீர உணர்வு துண்டிக்கப்படும். எனவே எம்மிடம் உள்ள மேற்குறிப்பிட்ட 10 விவகாரங்களையும் அடக்கும் போது- நாம் முருக நிலையில் இருந்து புலனடக்கம் உடையவனாக இருக்கும் போது- எம்மிடம் உள்ள பத்து விவகாரங்களுமே குறைந்து குறைந்து இல்லாமலே போகும்.

நாம் எம்முள் ஒளியை காண வேண்டுமானால் எம்முள் ஏற்படும் கொடூரமான விவகாரங்களில் இருந்தும் புலன் உணர்வுகளில் இருந்து விடுபட்டு, உயர் நிலையை எம்முள் கொண்டு வந்தால் அது ஒளி தீபமாகப் பிரகாசிக்கும். அதாவது ஆத்ம ஒளி உலகெங்கும் பரவி இந்த உலகில் உள்ள அசுர குணம் அடக்கப்பட்டு ஆத்மநிலை ஓங்க உதவும். எனவே "நாம்" என்பது இந்த உடல் அல்ல. திவ்ய குணம் படைத்த "ஆத்மா" திவ்ய குணமான அமைதி, அன்பு, அறிவு, தூய்மை, சந்தோஷம், அட்ட சக்திகள் அனைத்தும் நிறைந்த சத்-சித்- ஆனந்தம் நிலையான ஜீவன்முத்தியை அடைய முனைய வேண்டும்.

மனிதன் கலியுகத்தில் இழிவு நிலையிலேயே இருக்கின்றான். இறைவன் மனிதனை மலர்களாக வருமாறு அழைக்கின்றான். ஆனால் மனிதனோ, மலர்களையே இறைவனின் பூசைக்கு அர்ப்பணிக்கின்றானே அன்றி, மனங்களை மலர்களாக மாற்று வதில் இருந்து தவறுகிறான். எம்மால் இத்தவறு உணரப்படும் போது நாம் சந்திக்கின்ற அனைத்துத் துன்பங்களில் இருந்தும் விடிவு பெற வழிபிறக்கும். கைலாச வாகனம் எமக்குப் புகட்டுவது இதனையே ஆகும்.

**- பஞ்சவர்ணன்.**

# செல்வச் சந்நிதி ஆலய பெருந்திருவிழா 31ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஓக. 25

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர் வரும் 31ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்து டன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி காலை 9 மணிக்கு பூங்கா வனத் திருவிழா இடம் பெறும். 9ஆம் திகதி கைலா சவாகனமும் எதிர் வரும் 13 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு சப்பறத்திருவிழாவும் இடம்பெறும்.

14ஆம் திகதி காலை 8.30 மணிக்குத் தேர்திருவிழாவும் 15 ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

தினமும் காலைத் திரு விழா 8 மணிக்கும் மாலைத் திருவிழா 4 மணிக்கும் ஆரம்ப மாகி நடைபெறவுள்ளன.

திருவிழாக் காலங்களில் ஆலயத்தில் அன்னதானம் இடம்பெறும். அன்னதானம் செய்ய விரும்பும் அடியார்களை ஆலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)



உரும்பிராய், காளி கோயில் என அழைக்கப்படும் காமாட்சி அம்மன் ஆலய தேர்த்திருவிழா கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. தேரில் அம்பாள் வீதி உலா வரும் காட்சி.




நல்லூர் கந்தசுவாமி கோயிலில்
இன்று இருபதாம் திருவிழா
கைலாசவாகனம்
காத்திடுவாய் தமிழரெமை கைவேலினால்.

விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

இரத்தினம் சேவிஸ் ஸ்ரேசன்
இல. 30, சிறாம்பியடி லேன்,
யாழ்ப்பாணம்.


## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.25

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப் பழை துர்க்காதேவி ஆலய ஆதரவுடன் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று பொன்.ஸ்ரீ வாமதேவனின் இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

வயலின் கே.குகபரன், மிருதங்கம் எஸ்.துரைராசா, கடம் ஞ. செல்வரத்தினம், கெஞ்சிரா வி.ராகவன்.

* * *

யாழ்ப்பாணம், ஓக.25

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் பெருந்திருவிழாக் காலங்களில் நாவலர் மண்டபத்தில் நடத்தப் பட்டுவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று திங்கட்கிழமை 'கந்தன் திருவடியே சரணம்' என்னும் தலைப்பில் சைவப்புலவர் நவநீதன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய அறநெறிப்பாடசாலை, கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்மன் அறநெறிப்பாட சாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

* * *

யாழ்ப்பாணம், ஓக.25

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் சைவமகா சபையின் ஏற்பாட்டில் நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா கந்தபுராணம் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வருகின்றார். இதில் இன்று சூரன் அரசாட்சி என்னும் தலைப்பில் சொற் பொழிவு இடம்பெறும்.

# நல்லூர்ப் பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



விளையுமிச்சை யெல்லாம் வெறுத்தே யெஞ்ஞான் றும்
இளையோன் றிருப்பாத மேத்த- மழைபோற்
கருணைவருமே கருதிலங்கை நாட்டீர்
தருண மிதுகண்டீர் தான்.

- யோகர் சுவாமிகள்.

## தீர்வுதனைத் தந்திடுவாய்!

சித்தர்கள் தடம்பதித்த
புண்ணிய பூமியில்
நல்லாட்சி புரிந்திடும்
நல்லை நாயகனே - எம்
தொல்லைகள் போக்கிடவே
வேலெடுத்து புறப்படு
பகையறுத்து பாவியர்
எம் வாழ்வுதனை பாரினில்
உயர்த்திடவே - கந்தனே
தந்திடுவாய் தீர்வுதனை.

எஸ்.கவிநேசன் (சண்டிலிப்பாய்).

## பேரின்பவாழ்வினைத் தருவாய்

அடியவர் மனக்குறை அனைத்தையும் சொல்லி
கைகூப்பி நின்று கண்ணீர் சொரிந்தால்
கண்ணிமைப் பொழுதில் கடுகதியாய் வந்து
திருக்கரம் நீட்டியே தீவினை களைவாய்.

சங்கார வேலெடுத்து தாண்டவமாடி
அரக்க மூர்க்கத்தின் ஆணிவேர் அறுத்தே
அல்லற்படும் உயிருக்கு அபயம் அளித்து
முடிவிலாப் பேரின்ப வாழ்வினைத் தருவாய்.

மு.சிவபாதம் (தீவகம்).

## சாந்தி தந்தருள் கந்தனே!

நல்லை வந்துறை நற்றமிழ்க் கந்தா!
நம்பி வந்துனைப் பக்தி கொண்டு நாம்
வல்ல தெய்வமே! வந்தனை செய்கின்றோம்!
வள்ளி தெய்வானை பர்த்தாவே! நித்தம்
சொல்லொணா அல்லல் வந்தெமது உள்ளம்
சோர்வுறு கின்றதே! சுந்தரச் செல்வனே!
தில்லைக் கூத்தன் மைந்தனே! நல்ல
தீர்வும் சாந்தியும் தந்திட வேண்டுமையா!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்.

## காத்தருள்வாய் கந்தவேளே!

பிரணவத்தின் மத்தியில் அமர்ந்தவனே!
சுவாமிநாதன் எனபெயர் பெற்ற வல்லவனே!

ஆறுபடை வீடு கொண்ட சண்முகனே!
ஞானவேல் கொண்டு வினைதீர்த்த வேலவனே!

பார் புகழ பவனி வரும் அழகனே!
நல்லூர்ப் பதி வாழும் குமரனே!

தினம் ஓடி வந்தோம் உமை நாடி முருகனே!
எம் இடர்களைந்து அருள் புரிவாய் கந்தனே!

ஜெ.வினோத் (யாழ்ப்பாணம்).

## அடியார் துயரம் உனக்கு விளங்கவில்லையோ!

அருள்புரி என்று உன்னை
அணுகியே துதிக்க மக்கள்
இருள்களை என்று கவிஞர்
இரந்துமே பாடுவார்கள்
ஒருபெரும் சக்தி நீயென்று
ஒலிக்குது இதிகாசங்கள்
உருகிடும் அடியார் துயரம்
உனக்கது விளங்கலையோ!

லக்ஷ்மன்.

## குருவாய் வந்தால் ஆகாதோ?

அருளால் உலகைத் தாங்கி வரும்
அப்பன் மகிழப் பிரணவத்தைக்
குருவாய் அமர்ந்து அருள் புரிந்த
குகனே முந்தைக் கொடிய வினை
இருளில் கிடந்து கரை காணா
தேங்கும் அபலை உய்ய வருட்
குருவாய் வந்தாலாகாதோ
குமரா நல்லைப் பெருமானே!

வி.பிரான்சீஸ் (ஊர்காவற்றுறை).

## எமைக் காத்தருள்வாய் சண்முகனே!

அறுபடை வீடு கொண்டவனே!
அவனியில் வந்து உதித்தவனே!
அமரரைக் காத்தருள் புரிந்தவனே!
நல்லைப் பதி வாழும் அழகனே!
நடுவுநிலை தவறாத குகனே!
மயிலேறி ஆடிவரும் முருகனே!
பக்தர்கள் துயர் தீர்க்கும் வேலவனே!
எமைக் காத்தருள்வாய் சண்முகனே!

செல்வராணி (வட்டுக்கோட்டை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்



கடந்த 2002ஆம் ஆண்டு சேதமடைந்த இந்த வைத்தியசாலையை மீள இயக்குவதற்கு குடிதண்ணீர் விநியோகத்திற்கென நீரிறைக்கும் இயந்திரம் உட்பட ஒரு லட்சம் ரூபாவுக்கு மேலான உபகரணங்களை வழங் கிய

**திருமதி கயிலாயபிள்ளை காசிப்பிள்ளை (மீசாலை)**

அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குபற்றி அவரின் ஆத்மாவின் ஈடேற்றத்திற்கு பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை
அபிவிருத்திச் சபை.



வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் 8ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில், 2006ஆம் ஆண்டின் சிறந்த வங்கியாளராகத் தெரிவு செய்யப்பட்ட இலங்கை வங்கி முல்லைத்தீவுக் கிளை முகாமையாளர் க.லட்சுமணசர்மாவுக்கு சங்கத்தின் செயலாளர் ஆ.இராசநாயகம் பாராட்டு சான்றிதழ், பரிசுகள் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 15.07.1972 உதிர்வு 28.05.2008



அமரர்

**பரநிருபசிங்கம் தேவகுமார்**
**(அகில இலங்கை சமாதான நீதவான, சக்தி T.V, சக்தி F.M ஊடகவியலாளர்)**

கடந்த 28.05.2008 அன்று அகாலமரணமடைந்த எமது குடும்ப விடிவிளக்கின் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிபுரிந்தவர்கள், தொலைபேசி, தந்தி மூலமாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் மரணச் செய்தியை சர்வதேசத்திற்கு அறியத்தந்த ஊடகவியலாளர்கள், மற்றும் சகல வழிகளிலும் ஒத்தாசைபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இரத்தஉறவுகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (25.08.2008) திங்கட்கிழமை எமது இல்லத்தில் மு.ப.11 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.*

தகவல்:
"தில்லைப்பதி" முளாய் வீதி, வட்டுக்கோட்டை.
தாய், சிறியதாய், அண்ணாமார், அண்ணிமார், பெறாமக்கள்.

## கோப்பாய் கால்நடை வைத்தியர் பிரிவில் தடுப்பூசி

கோப்பாய்,ஓக.25

கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் பெண் நாய்களுக்கு கர்ப்பத்தடை ஊசி ஏற்றப்படவுள்ளது.

பெண் நாய் வளர்ப்பவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் நாயை கொண்டு வந்து ஊசி மருந்தை போடலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நல்லின புல் துண்டமான 'Co - 3' இன வகைகளையும் இலவசமாக பெறலாமெனவும் மழை காலம் ஆரம்பிக்கையில் நடுவதன் மூலம் அதிக பயனைப் பெறலாமெனவும் கால்நடை வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

(202-72)

## ஆரம்ப ஆசிரியர் பதவி

ஆரம்பக்கல்வி பயிற்சி பெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு வழிகாட்டும் அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் உரிய சான்றிதழ்களுடன் காலை 8 - 10 வரை நேரில் சமூகம் தரவும்.

அதிபர்.

The Express Institute
Irupalai, Kopay

## தேவை

கணனி திருத்தத் தெரிந்த, ரைப் செற்றிங் தெரிந்த (பெண்) இருவர் தேவை. அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகட்கு: கணேசன் தொலைத்தொடர்பு நிலையம், K.K.S. வீதி, கொக்குவில். T.P. 021 222 2585

## சிறுவர்களுக்கு கணனிப் பயிற்சி

மந்திகை,ஓக.25

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் சிறுவர்களுக்கான ஆரம்பக் கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

மூன்று தொகுதிகளாக இக் கணனிப் பயிற்சி நெறிகள் நடைபெற்று வருகின்றன.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

1013 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மகரம் **01 12 28 32**

**22-08-2008**

செல்லுபடியாகும் தொடர் இல. 5911050 - 5926974

ஜக்பொட் பரிசு ரூபா. 1,795,600/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 349,782 | 10/- | 3,497,820/- |
| 2 இலக்கங்கள் | 32,065 | 20/- | 641,300/- |
| 1 இல. + லக்கினம் | 31,722 | 30/- | 951,660/- |
| 2 இல. + லக்கினம் | 2,913 | 100/- | 291,300/- |
| 3 இலக்கங்கள் | 854 | 500/- | 427,000/- |
| 3 இல. + லக்கினம் | 73 | 5,000/- | 365,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,795,600/- | 1,795,600/- |
| மொத்தம் | | | 8,269,680/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 417,418 | | 8,769,680/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இலக்கம் 4048712 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 ஆகஸ்ட் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| அம்பாறை | 5915264-8-25 |
| மாத்தறை | 5923478-8-94 |
| கொழும்பு | 5911398-5-07 |
| மொனராகலை | 5924026-5-75 |
| காலி | 5920685-9-11 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்
வட்டுக்கோட்டை

### புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பம்; September 2008

அரச "Tertiary and Vocational Education Commission" ஆல் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. குளிர்சாதனப்பெட்டி (Fridge), வளி சீராக்கி (Air - conditioner) திருத்துதலும் பொருத்துதலும். (1வருடம்)
2. மின் இணைப்பு அமைத்தல் (Electrical Wiring) (1வருடம்)
3. அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும். (6மாதங்கள்)
4. ரேடியோ, T.V. பழுதுபார்த்தல். (6 மாதங்கள்)
5. மின்னியலும் இலத்திரனியலும். (Electrical & Electronic) (6 மாதங்கள்)
6. Civil Draughtmanship (1 வருட டிப்ளோமா கற்கைநெறி)
7. Computer Programming and Data Processing. (1 வருட டிப்ளோமா கற்கைநெறி)
9. MS Office. ( 3 மாதம் பகுதி நேரம்)
10. Printing Technology. (3மாதம் பகுதி நேரம்)
11. Computer Hardware. (3 மாதம் பகுதி நேரம்)
12. Micro Media Flash (3 மாதம் பகுதி நேரம்)
13. Visual Basic (3 மாதம் பகுதி நேரம்)

* குறுகிய காலப் பயிற்சி நெறிகள்.
* குறைந்த கட்டணம்! அதுவும் தவணை முறையில் செலுத்தும் வசதி!!
* நிறைவான செய்முறைப் பயிற்சிகளுடன் கூடிய நன்கு வடிவமைக்கப்பட்ட கற்கை நெறிகள்.
* மேலதிகமாகக் கணனி, ஆங்கிலம் ஆகிய துறைகளிலும் அனைவருக்கும் பயிற்சி.
* சிறந்த நூலகம், விளையாட்டுத்துறை போன்ற மேலதிக வசதிகள்.
* 784, 785, 789 இலக்க பேருந்து, சிற்றூர்தி மார்க்கங்களில் வந்து செல்லக்கூடிய அமைவு.

சுயதொழில் ஆரம்பிக்க ஆர்வமுள்ளோருக்கும், மத்தியகிழக்கு நாடுகளில் தொழில் பெறச் செல்ல எண்ணியுள்ளோருக்கும், மேற்படிப்பைத் தொடர முடியாமற் போனோருக்கும் இது அரிய சந்தர்ப்பம்!

விண்ணப்பப் படிவங்களைக் கீழ்க்கண்ட முகவரியில் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ பெற்று, விண்ணப்பிக்கலாம்.

இயக்குநர்,
யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்,
வட்டுக்கோட்டை.
TP: 021 222 8275 , 060 221 3139

## மூன்றாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்





| | | |
|---|---|---|
| மலர்வு 10.05.1970 | மலர்வு 06.10.1992 | மலர்வு 13.12.1993 |

உதிர்வு : 28.08.2005

| | | |
|---|---|---|
| அசோக்குமார் செல்வராணி | அசோக்குமார் நிவானந்தன் | அசோக்குமார் நிவாஜனி |

ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறவில்லை எம்துயரம்
தீரவில்லை எம் கவலை
காலங்கள் மாறலாம் கோலங்கள் மறையலாம்
கடைசிவரை நிலைத்திருக்கும் நினைவுகள்
உங்கள் காலடியில் எங்கள் விழிப் பூக்கள்.

*குருபரன் கொமினிக்கேஷன், கரணவாய் மத்தி, கரவெட்டி. T.P. 021 226 3606*

உங்கள் பிரிவால் வாடும்:
அக்கா, பெரியம்மா,
சி.உமாராணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியாவில் நடைபெற்று வரும் மாகாண மட்ட விளையாட்டுப்போட்டிகளில் வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 16, 19 வயதுப் பிரிவுகளில் சம்பியனானது.

சம்பியனான அணியினர் தமது பொறுப்பாசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (1)

# விறுவிறுப்பான ஆட்டத்தில் 15 ஓட்டங்களால் வென்று அசத்தியது தெல்லிப்பழை யூனியன்

## நால்வர் அரைச்சதம் கடந்தனர்

யாழ்ப்பாணம், ஓக.25

பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் விறுவிறுப்பான ஆட்டம் ஒன்றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 15 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

யூனியன் கல்லூரி வீரர்களான இராகுலன், அனுசியன் ஆகியோர் அரைச்சதம் கடந்தனர். யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்களான எஸ்.மதுசன், எம்.மதுசன் ஆகியோரும் அரைச்சதம் கடந்தனர்.



ராகுலன்



அனுசன்



எம்.மதுசன்



எஸ்.மதுசன்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டமொன்றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 215 ஓட்டங்களை பெற்றுகொண்டது.

இராகுலன் ஆட்டமிழக்காது ஒன்பது நான்குகள், மூன்று ஆறுகளுடன் 78, அனுசியன் எட்டு நான்குகளுடன் 53, சிலோஜன் 13 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 34 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பென்ஜோய் 9 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 40 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், கஜேந்திரா 10 ஓவர்கள் பந்து வீசி 39 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், எம்.மதுசன் 6 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 10 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், பவகுகன் 8 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 35 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், பெண்டில்கரன் 7 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

216 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி 48.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 200 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

எஸ்.மதுசன் பதினொரு நான்குகளுடன் 62 , எம்.மதுசன் ஆறு நான்குகளுடன் 53, டிலக்சன் 16 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 22 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பிரசாந் 10 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 17 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், சாய்ராம் 10 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், இராகுலன் 9 ஓவர்கள் பந்த வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 35 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், சிலோகன் 5 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், சுகீசன் 7.3 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)



தொல்புரம் வீரவத்தையில் சிறுவர் தலைமையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட செல்வன் ஆர்.ரகுராம் சிறுவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# குறைந்த ஓட்ட இலக்குடன் துடுப்பெடுத்தாடி விக்னேஸ்வராவை வென்றது யாழ்ப்பாணக் கல்லூரி

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாட சாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவிற்கிடையே நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 'சுப் பர் 6' ஆட்டம் ஒன்றில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்பாணக் கல்லூரியும் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்கினேஸ்வராக் கல்லூரி 48.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இராகுலன் 17, திவாகர் 14 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 31 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பவகுகன் 10 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், கஜேந்திரன், மதுசன் முறையே 10 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14, 19 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 விக்கெட்டுகளையும் பென்ஜோய் 4 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் ஓர் ஓட் டத்துக்கு ஒரு விக்கெட்டையும் பெண்டில் கரன் 7.1 ஓவர்கள் பந்துவீசி 5 ஓட்டமற்ற ஓவர்களுடன் 2 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

குறைந்த ஓட்ட எண்ணிக்கையான 99 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி 30.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 99 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

எஸ்.மதுசன் ஓர் ஆறு, ஏழு நான்குகளுடன் 44 ஓட்டங்களையும் பெண்டில்கரன் இரண்டு நான்குகளுடன் 19, பென்ஜோய் 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 13 ஓட்டங்களும் பெறப்பட்டன.

விக்கினேஸ்வராக் கல்லூரி சார்பில் பந்து வீசிய அனுசாந் 6 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், அபிராம் 8 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 20 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# 150 ஓட்டங்களால் வென்றது சென்றல்: ஜக்சன் 105 ஓட்டங்களை விளாசினார்

வலி.வடக்கு, ஓக.25

இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்திவரும் கிரிக்கெட் சுற் றுப் போட்டியின் ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 150 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பெரியபுலம் மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

களை கட்டுகிறது பாடசாலைகளின் கிரிக்கெட் கொண்டாட்டம் துடியன்

முதலில் துப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 38 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

ஜேம்ஸ் ஜக்சன் 76 பந்துகளைச் சந்தித்து பதினைந்து நான்குகள், இரண்டு ஆறுகளுடன் 105, ஹரிஸ் 25, ஜெனோசன் 22 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகாள 35 ஓட்டங்களும் பெறப்பட்டன.

தர்சன் 7 ஓவர்கள் பந்துவீசி 35 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், ரவிசாந், அபிநயன் 3 ஓவர்கள் பந்து வீசி முறையே 14, 15 ஓட்டங்களைக்கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும், அனுசன் 4 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், பிரதீஸ் 7 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

232 என்ற பெரிய இலக்கை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய பெரியபுலம் மகா வித்தியாலயம் 26 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 81 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

சாரியன் ஏழு நான்குகளுடன் 40 ஓட்டங்களுடன் உதிரிகளாக 15 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஹரிஸ் 8 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், தர்சன் 2.4 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 3 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், கோபிகன் 4 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், துசாலியன் 4 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்[illegible] எடின் 3 ஓவர்கள்[illegible] ளுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)



கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த ஐக்கிய விளையாட்டுக்கழக அணிகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட நிகழ்வில் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்ட அணித் தலைவருக்கு சனசமூக நிலையங்களின் மாநகரசபை மேற்பார்வை உத்தியோத்தர் ரி. சோமசுந்தரம் கைலாகு கொடுப்பதைப் படத்தில் காணலாம்.

# சென்.ஜோன்ஸை 5 விக்கெட்டுக்களால் வென்று திகிலூட்டியது நெல்லி. சென்றல்

யாழ்ப்பாணம், ஓக.25

யாழ்.பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் 17 வயதுப் பிரிவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 5 விக் கெட்டுக்களால் வெற்றிபெற்று திகிலூட்டியது.

சென்.ஜோன்ஸ் வீரன் பி.ஜெயந்தன் 45 பந்துகளில் 11 நான்குகளுடன் 54 ஓட்டங்களை அணிக்குப் பெற்றுக்கொடுத்தார்.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் 17 வயதுப் பிரிவினர்களுக்கிடையே நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆட்டமொன்றில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணியும் மோதிக்கொண்டன.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 29.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பி.ஜெயந்தன் பதினொரு நான்குகளுடன் 49 பந்துகளில் 54 மற்றும் சுதன் மூன்று நான்குகளுடன் 15, ஜஸ்மன்நிசாந் 15 [illegible] பெற்றுக்கொண்டார்கள்.

[illegible] 8.3 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 20 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், அரிகரன் 5 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஒருவருடன் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், கருணானந்தன் 5 ஓவர்கள் பந்து வீசி2ஓட்டமற்ற ஒவருடன் 6 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், அரவிந் 3 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.



ஜெயந்தன்

144 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம்19 ஓவர்களில் 5 விக் கெட்டுகளை இழந்து 144 என்ற வெற்றி இலக்கை அடைந்தது.

வி.தர்சன் ஏழு நான்குகள், 2 ஆறுகளுடன் 54 பந்துகளில் 50, அரிகரன் 6 நான்குகள் ஓர் ஆறுடன் 31 பந்துகளில் 33, உமைசுதன் ஏழு நான்குகளுடன் 30 பந்துகளில் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

ஆனந் 8 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 47 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், டேவிற் சுதர்சன் 4 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் பைப்பற்றினார்கள். (1-86)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

IIS CITY CAMPUS

# What Next?......After A/L

**Obtain a World Class British Qualification**

BTEC edexcel INTERNATIONAL **HND**

in Computing (General)
in Computing (ICT System Support)
in Computing (Software Development)

*Delivered locally.........*
*Recognized globally......*



New batch starts on
14.09.2008 @ 10.00 a.m.

B. ...ons) 1 Ye... Universiti... UK ...tralia, C... — 3rd Year

BTEC HND Computing (General) / Computing (ICT System Support) Computing (Software Development) — 2nd Year

BTEC HNC Computing — 1st Year

G.C.E A/L with 2 Subjects



K.நிசாந்தன் யாழ்ப்பாணம்.

யாழ் இந்துக்கல்லூரியின் மாணவனாகிய நான் 2003 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு உயிரியல்பிரிவில் தோற்றியிருந்தேன்.எனது எதிர் காலம்தொடர்பாக எனக்கும் என் பெற்றோருக்கும் இருந்த கனவுகளை எனது பரீட்சை முடிவு கலைத்து விட்டது. இந்நிலையில் உயர் கல்வி கற்கவேண்டும் என்ற ஆர்வம் இருந்த எனக்கு IIS City Campus நிறுவனத்தின் HND கற்கை நெறி ஓர் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கித்தரும் என எனது சுற்றத்தாரும் நண்பர்களும் அறிவுறுத்தினர். அதற்கமைய IIS City Campus இல் HND in Software Engineering 4வது பிரிவில் இணைந்து 2 வருடத்தில் அதியுயர் பெறுபேறான Distinction தரத்தில் சித்தியடைந்து வெளியேறினேன். இத்தகமை எனக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது. இக்கற்கை நெறியுடன் கணனித்துறையின் பட்டப்படிப்பிற்கு இணைந்து கொள்ள முடியும் என்பதால் பிரித்தானிய Midlesex பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான கொழும்புக்கிளையில் B.Sc.(IT) இறுதியாண்டில் இணைந்து தகவல் தொழில்நுட்பத்தில் B.Sc. பட்டதாரி ஆகியுள்ளேன். தற்போது எனது பட்டமளிப்பு விழாவிற்காக பிரித்தானியா வந்திருக்கும் நான் கடந்த July 8 ம் திகதி நடந்த பட்டமளிப்பு விழாவிலே B.Sc. பட்டத்தை பெற்றுக் கொண்டேன்

IIS City Campus நிறுவனத்தினால் வழங்கப்படும் HND சான்றிதழ் சர்வதேச அங்கீகாரம் பெற்றது என்பதால் எனது பட்டமளிப்பு விழாவிற்கு பிரித்தானியா வருவதற்கான Visa வினை இலகுவாக பெற்றுக்கொள்ள முடிந்தது. என் போன்று எதிர்கால உயர்கல்விக்கு ஏங்கி நிற்கும் குடாநாட்டு மாணவர்களுக்கு சொந்த இடத்தில் பெற்றோரின் பாதுகாப்பில் குறைந்த கட்டணத்துடன் சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர் கற்கை நெறிகளை வழங்கிவரும் IIS City Campus நிறுவனம் ஓர் வரப்பிரசாதம் ஆகும்.

Edexcel International 'A' rated centre for the 4th consecutive year

IIS CITY CAMPUS
#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:iiscc@sltnet.lk
Web: iiscitycampus.net


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர் திரு.தியாகராசா சத்தியபாலன் அவர்களின் பாசமிகு தந்தையார்

**கந்தையா தியாகராசா**

அவர்கள் கடந்த 21.08.2008 வியாழக்கிழமை சிலாபத்தில் காலமாகி விட்டார். இத்துயர் செய்தியால் கவலையடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

கல்லூரிச் சமூகத்தினர்
**யா/புனித றோ.க.வித்தியாலயம்.**
தொடர்பு: 032 4923757 (77438)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னபூரணம் கோவிந்தர்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கோவிந்தர் அன்னபூரணம் வெள்ளிக்கிழமை (22.08.2008) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கோவிந்தரின் பாசமிகு மனைவியும் சின்னத்துரை காலஞ்சென்றவர்களான நடராஜா, சிவசுப்பிரமணியம், சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் தர்மராஜா (Retired.DDR, Agriculture Research Officer, Vavuniya), தேவராஜா, அருந்தவமலர், இரத்தினராஜா, காலஞ்சென்ற யோகராஜா ஆகியோரின் அன்புத் தாயும் ரஞ்சினிதேவி (Teacher, Negombo/ Vijayaratnam M.V), ஜெயலட்சுமி, சிவயோகநாதன் (C.C, Planning branch, Divisional Secretariat, Kopay), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி (Nursing officer, Teaching Hospital, Jaffna) ஆகியோரின் அன்பு மாமியும் விஜயவரதன் (3rd year, B.sc, Computer science, Binary University, Malaysia), குகாயினி (3rd year, Physical Science, University of Jaffna), சுதர்சினி (Teacher, J/A.M.T.M School, Navakiri), தேவராகுலன், சர்மிளா, யோகராகுலன், லக்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2008) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி மாசிவன் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"இராமால்",
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (77427)

தகவல்:
கோ.தேவராஜா (மகன்)

## வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.25

இலங்கை திறந்த பல்கலைக்கழக பட்டமேற்கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கான நாள் பாடசாலை வகுப்புகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என கற்கை நெறி இணைப்பாளர் தெரிவித்தார். (202)

## தவறி விழ்ந்து மின்சாரசபை ஊழியர் காயம்

குடத்தனை,ஓக.25

மின்கம்பத்தில் நின்று வேலை செய்து கொண்டிருந்த மின்சாரசபை ஊழியர் தவறிவீழ்ந்து காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11 மணிக்கு நுணாவிலில் இடம்பெற்றது.

சாவகச்சேரி மின்சாரசபை ஊழியரான தில்லைநாதன் தவரஞ்சன் (வயது 28) என்பவரே தவறி வீழ்ந்து காயமடைந்தார்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (202-78)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஓக.25

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கி அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவில் சுப்பசிக்ஸ்சுக்கு தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டியில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானம்

* கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி.

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானம்.

* வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானம்.

* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

(202-86)

## பாரதிதாசன் நூலக சமூகத்தின் கண்ணீர் பூக்கள்

### அமரர் கதிர்காமத்தம்பி அருளானந்தம் ஆசிரியர்

*(முன்னாள் கௌரவ நூலகர்)*

கௌரவ நூலகராகப் பாரதி நூலகத்தை நூலக அமைப்பிற்கு வித்திட்டு சேவை புரிந்த சேவையின் செம்மல் இவ்வுலகை விட்டு 21.08.2008இல் பிரிந்து சென்ற அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பாரதிதாசன் நூலகம்**
அல்வாய்.

(சி/554401)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா ஐயாத்துரை



நீர்வேலி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா ஐயாத்துரை நேற்று (24.08.2008) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை (காட்டர்) அவர்களின் அன்பு மனைவியும் சுகுணா, ரவிதாசன் (U.K), உமாதேவி (ஆசிரியை யா/நீர்வேலி சி.சி.தமிழ்க்கலவன் பாடசாலை), கமலேஸ்வரி (கனடா), விமலேஸ்வரி, குகதாசன் (கனடா), மோகனதாசன் (U.K) ஆகியோரின் அன்புத் தாயும் பாலாபரணம் (கொக்குவில்), காலஞ்சென்ற யோகானந்தா மற்றும் அருணா, கருணாகரன், பாலதேவி காலஞ்சென்ற காந்தன் மற்றும் உஷா ஆகியோரின் மாமியும் நித்தியா, ரகுராஜ், நிரூபன் (கரிகணன் பிறிண்டேஸ்), சதீஸ்வரன் (மலேசியா), கீர்த்திபன், கௌசிகன், சக்தி, சங்கீதா, மதுரன், கஜன், நிலானி, சானுகா, சாருஜன், ஆகியோரின் பேர்த்தியும் பிரவீனயா, பவனுஜா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தேர்தல் முடிவு வாயிலாக யுத்தத்திற்கு தெற்கு அங்கீகாரம்

தீர்க்கமான தேர்தல் என்று நாம் சுட்டிக்காட்டிய தேர்தல் வாக்களிப்பின் முடிவுகள் வெளியாகிவிட்டன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு காத்திரமான வெற்றியைப் பெற்றிருக்கின்றது.

வடமத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகளுக்காக நடத்தப்பட்ட இத்தேர்தல் வெறும் பிரதேச மட்டப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் மட்டுமல்ல, அதற்கு அப்பாலும் தேசிய மட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது இது என்று சுட்டிக்காட்டியிருந்தோம்.

பெரும் தேர்தல் வன்முறைகளுக்கு மத்தியில் வாக்களிப்பு மட்டும் ஓரளவு அமைதியாக நடந்தேறத் தேர்தல் முடிவுகள் வெளியாகிவிட்டன.

தமிழர் தாயகம் மீது தமது அரசு தொடுத்திருக்கும் கொடூரப் போருக்குத் தென்னிலங்கைச் சிங்களத்திடம் அங்கீகாரம் பெறும் தேர்தலாக நாட்டினதும் அரசினதும் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ இந்தத் தேர்தலை முன்நிறுத்தியிருக்கின்றார் என்றும் -

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவினது தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவோ பட்டினியில்லாத வாழ்க்கைக்கும் சமரசம் நிலைநிறுத்தப்படுவதற்கும் மக்களின் அனுமதியைக் கோரும் வாக்கெடுப்பாக இதனை வெளிப்படுத்தி வருகின்றார் என்றும் -

தேர்தலுக்கு முன்னரே சுட்டிக்காட்டி வந்தோம்.

இப்போது தென்னிலங்கை மக்கள் தமது பொன்னான வாக்குகள் மூலம் தமது தீர்ப்பை - கருத்தை - வெளிப்படுத்தி விட்டனர்.

பட்டினியில்லாத வாழ்வும், சமரசமும் எமக்கு முக்கியமல்ல. தமிழர் தாயகம் மீதான யுத்தத்தில் சிங்களப் படைகள் - அரசுப் படைகள் - வெற்றியடைவதே எமக்குப் பிரதானம் என்ற தீர்ப்பை அவர்கள் தமது வாக்குகள் மூலம் தெளிவாகத் தெரியப்படுத்திவிட்டார்கள்.

2001 டிசெம்பர் பொதுத் தேர்தல் சமயம், 'போரா? சமாதானமா?' என்ற கேள்வி எழுப்பப்பட்டபோது 'போர் வேண்டாம்; சமாதானம்தான் வேண்டும்' - என்று தென்னிலங்கை மக்கள் கூச்சலிட்டனர்.

ஆனால் இன்றோ, 'போரா ? சமரசமா?' என்ற கேள்விக்குப் போரே தமது தெரிவு என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் அவர்கள்.

'பட்டினி கிடந்தாலும் சரி, போரில் வென்றால் போதும்' என்ற கருத்தையே தங்களின் ஒரே நிலைப்பாடாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் அவர்கள்.

'மனிதாபிமானத்தை நிலைநிறுத்துவதற்கான நடவடிக்கை' என்ற பெயரில் மஹிந்த ராஜபக்ஷ அரசு மேற்கொண்டுவரும் யுத்தத்துக்கு தென்னிலங்கை அங்கீகாரம் அளித்துவிட்டது என்பதே இந்தத் தேர்தலின் முடிவாகும்.

தென்னிலங்கை மக்களின் கருத்து சரியா, பிழையா? அது ஏற்புடையதா? அது நியாயமானதா? - என்பவையெல்லாம் வேறு விடயங்கள். ஆனால் யுத்தத் தீர்வு ஒன்று தமிழர்கள் மீது திணிக்கப்படுவதையே இன்றைய நிலையில் அவர்கள் அங்கீகரித்து, ஏற்றுக்கொண்டு, தமது முடிவாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் என்பது தெளிவு.

நமது அயல் தேசமான இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் ஊன்றிக் கவனிக்க வேண்டிய தேர்தல் முடிவும் விடயமும் இதுவாகும்.

''பேச்சுமூலம் நியாயத் தீர்வு ஒன்று காணுங்கள். யுத்தம் மூலமான அடக்குமுறைத் தீர்வைத் திணிக்க எத்தனிக்காதீர்கள். சிறுபான்மை இனச் சமூகத்தின் நீதி, நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் - கௌரவ வாழ்வை அவர்களுக்கு உறுதிப்படுத்தும் - சமாதானத் தீர்வை பேச்சுமூலம் எட்டுவதற்கான எத்தனங்களை மேலும் தாமதியாமல் ஆரம்பியுங்கள்!'' - என்று சர்வதேச சமூகம் இலங்கை அரசுத் தலைமையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

ஆனால் அதைச் செய்வதாக சர்வதேச சமூகத்துக்கு வாக்குறுதி அளித்து, அதற்குப் போக்குக் காட்டிக்கொண்டு, தனது அடக்குமுறைத் தீர்வை யுத்தத் தீவிர நெருக்குதல் மூலம் தமிழர் மீது திணிப்பதற்கு மஹிந்த அரசு கங்கணம் கட்டிச் செயற்படுகின்றது.

அமைதித் தீர்வு காண வலியுறுத்தும் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்துக்கு, வெளிப்பகட்டுக்கு எடுபடுவது போலக் காட்டிக்கொண்டு, தனது யுத்த நிகழ்ச்சி நிரல்படியே காய்களை நகர்த்தி, காரியங்களை ஆற்றுகின்றது ஜனாதிபதி மஹிந்தவின் அரசு.

அந்தக் கபடத் திட்டத்துக்கு தென்னிலங்கை மக்களின் அங்கீகாரமும் வாக்களிப்பு மூலம் கிடைத்திருக்கின்றது என்றால் அதன்பின் இவ்விடயத்தில் அரசுத் தலைமை எவ்வளவு முனைப்புக் காட்டும் என்பது ஊகிக்கத்தக்கதே.

ஈழத் தமிழர்களுக்கு பேச்சுமூலம் - அமைதி வழியில் - சமாதானத் தீர்வு இல்லவே இல்லை என்பது இத் தேர்தல் முடிவு மூலம் தென்னிலங்கையால் வெளிப்படையாக எடுத்தியம்பப்பட்டு விட்டது.

ஆகவே, இனி ஈழத் தமிழர்களுக்கு அமைதி வழியில், சமாதான முறையில் தீர்வுக்கு வாய்ப்பே இல்லை என்ற யதார்த்தத்தை உணர்ந்து சர்வதேச சமூகம் அதற்கேற்ப தனது காய்களை நகர்த்த வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது என்பதையே இத் தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

இந்தத் தேர்தல் முடிவில் புதைந்து கிடக்கும் தாற்பரியத்தை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளுமா?

# இலங்கையில் இன்று காணப்படும் சூழ்நிலையில் ஜேர்மனி பொருளாதார உதவி எதுவும் வழங்காது

## பல சர்வதேச நாடுகளும் இவ்விதமே கருதுவதாக தூதுவர் வீர்த் கூறுகிறார்

கொழும்பு, ஓக.25

ஜேர்மனியோ, பெரும்பாலான சர்வதேச நாடுகளோ இலங்கை அரசுடன் இணைந்து செயல்படக் கூடிய வகையில் இன்றுஇலங்கையில் நிலைமைகள் சுமுகமாகக் காணப்படவில்லை என்று இலங்கையிலுள்ளஜேர்மன்நாட்டு தூதுவர் ஜேர்கன் வீர்த் கூறினார்.

வர்த்தக விஸ்தரிப்புகள், வெளிநாட்டு முதலீடுகள், வளர்ச்சிக்கான உதவிகள், மனித உரிமைகள் மற்றும் இன்றைய போர் போன்ற விடயங்கள், இன்றைய சூழ்நிலையில் இலங்கை அரசுடன் இணைந்து செயல்படக் கூடிய சாத்தியம் இல்லை யென்று அவர் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் அமைதிக்கான வர்த்தக மாநாட்டில் அவர் உரை நிகழ்த்தினார்.

உங்கள் மக்களுக்கு ஒரு தீர்வினை வழங்கினீர்களானால் அந்தக் கணத்திலேயே ஒவ்வொரு இலங்கையரோடும் இணைந்து மீண்டும் பணியாற்ற நாம் தயாராகிவிடுவோம் என்றார் அவர். இந்தக் கருத்தினை சர்வதேச சமூகத்தின் பெரும்பாலான நாடுகள் பகிர்ந்து கொண்டுள்ளன என்றார். எவ்வாறாயினும் ஒவ்வொரு நாட்டினதும் முக்கியத்துவத்தைப் பொறுத்து அந் நாட்டினூடான தொடர்புகளில் எங்களால் இரட்டை நிலைத்தன்மை பேணப்படுவதுண்டு என்றும் ஜேர்மன் தூதர் கூறினார்.

### இரட்டை நிலைப்பாடு ஏன் பேணப்படுகிறது?

நாம் இரட்டை நிலைப்பாட்டை பேணுவதுண்டு. இலங்கை நடந்து கொள்ளும் விதத்தைப் பொறுத்து அல்லது ரஷ்யா, அல்லது சீனாவின் நடப்பைப் பொறுத்து அது அமையும் என்று கூறிய ஜேர்மன் தூதுவர் எமது பொருளாதார பட்டியலிலிருந்து உங்கள் நாடும் மறையுமானால் அதற்கு மாறாக வேறொன்றை மிக எளிதாகச் சேர்த்து விடலாம். ஆனால் எமது பொருளாதார வரைபடத்திலிருந்து ரஷ்யாவை நீங்குவோமானால், ஜேர்மனியில் வெளிச்சமெல்லாம் இல்லாமல் போய்விடும். ஏனென்றால் நாங்கள் ரஷ்யாவிலிருந்து மின்சாரம் பெறுகின்றோம். ஆகவே உங்கள் நிலை அப்படியல்ல என்று ஜேர்மன் தூதுவர் குறிப்பிட்டார்.

இந்த மாதிரி நிலைமைகளில் ஜேர்மன் அரசுகளோடு பொருந்தி வரும் நாடுகளுக்கு எமது வளர்ச்சி உதவிகள் போய்ச்சேரும். எந்த நாட்டில் அரசுகள், அரசியல் போக்குகள் நாட்டின் பொது நன்மையில் கவனம் செலுத்தி சகல மக்களதும் எதிர்கால வாழ் வினை மேம்படுத்த உழைக்கின்றனவோ அவர்களுக்கு உதவி புரிவது என்றுஜேர்மனியர்களான நாங்கள் முடிவு எடுத்துள்ளோம் என்று கூறினார் தூதர் வீர்த்.

ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள பணக்கார நாடுகளின் மேலதிக வர்த்தக உதவிகள் சம்பந்தப்பட்ட நாடுகளின் மனித உரிமைகள் மற்றும் சேம நல ஆட்சிகளைப் பொறுத்து அமைவதாகும் என்றும் ஜேர்மன் தூதுவர் கூறினார். (ப)

# வன்னிப் பகுதியில் மழைகாலம் ஆரம்பித்தவுடன் அகதிகள் பெரும் சுகாதார அனர்த்தங்களில் சிக்குவர்

## சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கிறார்

கொழும்பு, ஓக.25

எதிர்வரும் மாதங்களில் தொடங்க போகும் மழையால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் பெரும் சுகாதார அனர்த்தங்களுக்குள் சிக்கப் போகிறார்கள்.

கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிப் பாளர் டாக்டர் ஏ.சத்தியமூர்த்தி மேற் கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ளவர்களில் பெண்களும் சிறுவர்களும் பெரும் அனர்த்தங்களுக்கு உள்ளாவதை தடுக்க முன்னேற்பாடுகள் எவையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

போதிய போஷாக்கு இல்லாத நிலையில் மழைகாலத்தில் அபாயகரமான நோய்களுக்கு ஆளாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையைத் தவிர்க்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு தொண்டர் அமைப்புக்களிடம் கோரியுள்ளேன்- என்றும் அவர் தெரிவித்தார். (1)

# கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஓக.25

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் சிறுவணிக முகாமைத்துவம், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உயர்கல்விச் சான்றிதழ் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

விண்ணப்பங்களை யாழ்.பிராந்திய அலுவலகத்தில் பெற்று எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# கனடா, சுன்னாகம் மக்களின் நிதி உதவியுடன் தபாலகத்துக்கு 4 பரப்புக் காணி கொள்வனவு

## உதவியாளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறது நகர அபிவிருத்தி சபை

யாழ்பாணம், ஓக.25

சுன்னாகம் தபாலகத்துக்கு புதிய கட்டடம் அமைப்பதற்காக நான்கு பரப்புக் காணி பொதுமக்களும் கனடா வாழ் சுன்னாகம் மக்கள் ஒன்றியமும் வழங்கிய நிதியில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் நகர அபிவிருத்திச் சபையின் செயலாளர் சபா புஷ்பநாதன் மேற் கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

தபாலகத்துக்கான காணி கொள்வனவு தொடர்பாக தகவல் தெரிவிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுன்னாகம் தபாலகம் கடந்த சுமார் நூறு ஆண்டுகளாக இயங்கிவரும் நான்கு பரப்புக் காணியையும் சுன்னாகம் நகர அபிவிருத்திச் சபையினர் அஞ்சல் திணைக்களத்துக்கு நன்கொடையாக வழங்கியுள்ளமையை பொது மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

கனடா வாழ்சுன்னாகம் மக்கள் ஒன்றியம் மேற்படி தபாலகக் காணியில் இரண்டு பரப்புகளை கொள்வனவு செய்து எமக்கு தந்துதவியமைக்காகவும், மறு இரண்டு பரப்பினையும் கொள்வனவு செய்வதற்கு பெருமனதுடன் நிதியுதவி வழங்கிய பொது மக்களுக்கும், நாம் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

இரண்டு மாடிக் கட்டடத்திற்கான நிர்மாணப் பணிகளை தபால் திணைக்களத்துடன் இணைந்து முன்னெடுக்க சகல நடவடிக்கைகளையும் எமது சபை மேற் கொண்டு வருகின்றது- என்றார். (1)

# வன்னி மக்களுக்கு உதவுமாறு சர்வதேசத்திற்கு அழுத்தம்

## ஆஸ்திரேலியத் தமிழர் கவனஈர்ப்புப் போராட்டம்

மெல்போர்ண், ஓக.25

வன்னியில் தொடரும் யுத்தத்தால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவுமாறு சர்வதேசத்துக்கு அழுத்தம் கொடுக்கும் முகமாக ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் கவனஈர்ப்பு ஒன்றுகூடல் இடம்பெற்றது.



விக்டோரியா மாநில நாடாளுமன்றத்திற்கு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த கவன ஈர்ப்பு ஒன்றுகூடலில் 250 இற்கும் மேற்பட்டோர் பங்குபற்றினர்.

இலங்கை அரசின் மனிதாபிமான உதவிகள் மறுக்கப்பட்டிருக்கும் வன்னி மக்களின் உண்மை நிலவரத்தை எடுத்துக் கூறும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப் பட்டன.

தாயக உறவுகளுக்கு ஆஸ்திரேலிய அரசு உதவ வேண்டும் என்ற கோரிக்கைகளை உள்ளடக்கிய பதாகைகளை நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் தாங்கியிருந்தனர்.

இரண்டு மணிநேரம் இந்த ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெற்றது.

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 10 | 26.08.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | தசமி |
| | மு.ப. 11.17வரை |
| ந[illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |
| ராகுகாலம் : 03.05-04.35 | |

# இராணுவம், விமானப் படைக்கு 10,500 பேரை இணைக்க நடவடிக்கை

கொழும்பு, ஓக.25

இராணுவம் மற்றும் விமானப் படையில் 10,500 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

கூட்டுப்படைத் தலைமையகத்தின் அறிவுறுத்தல்களின் பேரில் ஆளணிப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்காக இராணுவத்திற்கு 8 ஆயிரம் பேரையும் விமானப் படைக்கு 2500 பேரையும் இணைத்துக் கொள்வதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித்தார்.

இராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் நடவடிக்கையின் 3 ஆம் கட்டம் கடந்த ஜூலை முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. எதிர்வரும் செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரையும் நட வடிக்கை தொடரும்.

இராணுவத்தின் தன்னார்வத் தொண்டுப் படையினர் உள்ளிட்ட அனைத்துப் படைப் பிரிவுகளுக்குமான ஆள் சேர்ப்புப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விமானப் படைக்கு ஆள் சேர்க்கும் பணிகள் இவ்வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன-என்றும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவாக சுபமுகூர்த்த அழைப்பு

அன்படையீர் !

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருஷம் ஆவணி மாதம் 11 ஆம் நாள் (27.08.2008) புதன்கிழமை காலை 9.31 மணி முதல் 11.23 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்,

| மணமகன் | | மணமகள் |
|---|---|---|
| பிரம்மஸ்ரீ<br>சி.சிவசுப்பிரமணியசர்மா |  | சௌபாக்கியவதி<br>செ.சுகுப்பிரதா |

திருமணம் மணமகள் இல்லத்தில் (அராலி) நடைபெறும்.
வரவேற்புபசாரம்: மணமகன் இல்லம் (புதுக்கோயில்) 27.08.2008 புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்:

சிவஸ்ரீ க.சிவதாசக்குருக்கள்-
கல்யாணி தம்பதிகள்
5/1,சிவகுமரபுரி,
புதுக்கோயில், கொக்குவில்.

சிவஸ்ரீ ச.செல்வக்குமாரக்குருக்கள்-
இராஜேஸ்வரி தம்பதிகள்
உடையார் லேன்,அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(இரு வீட்டார் அழைப்பு)

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

# Patrician Institutes

## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

யதொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

### ஆரம்பம் 01.09.2008

| | |
|---|---|
| A.ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING | DURATION 1 YEAR |
| B.DIPOLOMA IN MICROSOFT OFFICE | DURATION 6 MONTHS |
| C.DIPLOMA IN TYPE SETTING | DURATION 3 MONTHS |
| D.DIPLOMA IN COMPUTERISED ACCONTING | DURATION 4 MONTHS |
| E.DIPLOMA IN DEST TOP PUBLISHING | DURATION 6 MONTHS |
| F.DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L. | DURATION 3 MONTHS |
| G.INTER NET & E-MAIL | DURATION 1 MONTH |
| H.DIPLOMA IN INTER NET TECHNOLOGY | DURATION 5 MONTHS |
| I.DIPLOMA IN MICRO MEDIA | DURATION 5 MONTHS |

### CERTIFICATE COURSES

1. MS WORLD - 2000
2. MS EXCEL - 2000
3. MS ACCESS - 2000
4. MS POWER POINT
5. VISUAL BASIC VER 6.5
6. PASCAL
7. d.BASEIII+

EACH 3 MONTHS

8. PAGE MAKER
9. WINDOWS 95
10. COREL DRAW
11. D BASE FOR WINDOWS
12. PHOTO SHOP DELUX
13. ADOBE PHOTOSHOP
14. QUICK BOOK

| | |
|---|---|
| 1.சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும்(ஆங்கிலம்) (PITMAN LONDON EXAM PAPER) | காலம் 6 மாதம் |
| 2. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும்(தமிழ்) | காலம் 6 மாதம் |
| 3.ஜெனரல் எலக்ரிஸன். (மின்சார இணைப்பு மோட்டர் றிவைண்டிங்) | காலம் 6 மாதம் |
| 4.வானொலி , தொலைக்காட்சிப்பெட்டி திருத்துதல் (Oscilloscope) (அசைவுகாட்டி) இணை கையாள்வதுடன் கூடிய முழுமையான பயிற்சியும் செய்முறையும். | காலம் 6 மாதம் |
| 5.கடைச்சல் இயந்திரம் தொழிற்பயிற்சி (on the jop training) வழங்கப்படும். | காலம் 6 மாதம் |
| 6.மின் ஒட்டுநர் பயிற்சி (ARC WELDING & GAS WELDING ON THE JOP TRAINING) வழங்கப்படும். | காலம் 6 மாதம் |
| 7.மரவேலை (With use of Machinnery)(ON THE JOB TRINING) வழங்கப்படும். | காலம் 6 மாதம் |
| 8.குளிர்சாதனப்பெட்டி திருத்துதல் (REFRIGERATION AND AIR CONDITIONING) | காலம் 6 மாதம் |
| 9.PLUMBING | காலம் 6 மாதம் |
| 10.MASONARY | காலம் 6 மாதம் |

### வாகனத் தகுதிச் சான்றிதழ் 2008

2008 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் தை மாதம் தொடக்கம் வழங்கப்படுகின்றது என்பதனை வாகன உரிமையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு:**
1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ்வாழும் மாணவர்கள் ஆதாரங்காட்டி பங்குருவானவரின் (Parist prist) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெறலாம்.
3. பயிற்சிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:
REGISTAR
PATRICIAN INSTITUTE,
61(59) ST.PATRICK'S ROAD,
JAFFNA.
T.P.: 021 222 6148
FAX: 021 222 6148
E-mail: spitte@sltnet.lk

### புலோலி நூலகத்தில் நாளாந்த பத்திரிகைகள் வாசிப்பதற்கு வசதி

பருத்தித்துறை பிரதேசசபை யின் புலோலி பொது நூல் நிலையத்தில் அரச விடுமுறை தினங்களில் வாசகர்கள் நாளாந்த செய்திப்பத்திரிகைகளை வாசிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இதுவரை காலமும் விடுமுறை நாள்களில் பொது நூல் நிலையம் மூடப்பட்டிருந்தமையால் வாசகர்கள் நாளாந்த செய்திப்பத்திரிகைகளை வாசிக்க முடியாத நிலை இருந்து வந்ததமை குறிப்பிடத் தக்கது.

(202-236)

### நிவாரணம் விநியோகம்

நவாலி,ஓக.25

மானிப்பாய் ப.நோ.கூ.சங்க கிளைகளில் உலக உணவுத் திட்டத்தின் வெள்ளைக்காட் நிவாரணமும், சமுர்த்திக்கான நிவாரணமும் தற்போது வழங்கப் பட்டு வருகின்றன.

மேலும் பங்கீட்டு அட்டைக்கு 5 கிலோ மாவும் பாவனையாளர்களுக்கு வழங்கப் பட்டு வருகின்றது.

(202-100)

### கூட்டம்

தென்மராட்சி குழுக் கூட்டமும், பிரதேச விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறுமென பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.

(202-207)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 29 . 07 . 1933



உதிர்வு 26 . 07 . 2008

### திருமதி தம்பு தங்கம்மா

நாள்கள் முப்பத்தொன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன?
அவைகள் அனைத்தும் உங்கள்
அன்புக்கு ஈடாகுமா?

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

[77415]

உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக மாணவி
செல்வி சுவந்தினி சண்முகரத்தினம்
அவர்களின் அன்புத் தந்தை

### செல்லத்துரை சண்முகரத்தினம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விவசாயபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

19 ஆம் அணி மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை சண்முகரத்தினம்



கொல்லன்கலட்டியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சண்முகரத்தினம் 22.08.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சாந்தியின் அன்புக் கணவரும் சாமினி(பிரயோக உயிரியல், வவுனியா வளாகம்), சுவந்தினி(விவசாய பீடம், யாழ்.பல்கலைக் கழகம்), செந்தூரன்(A/L கலை, யா/மகாஜனக் கல்லூரி), செந்தில்குமரன்(தரம்9, யா/இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் மருதனார்மடம், பூவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச்சு வீதி, உடுவில்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா சௌபாக்கியவதி



துன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது அரசடி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்லையா சௌபாக்கியவதி நேற்று(24.08.2008) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி, அமரர் புவனேந்திரன் மற்றும் யோகாம்பிகை (ஜேர்மனி), கமலாதேவி, பாலசரஸ்வதிதேவி (ஹொலண்ட்), Dr.கருணாதேவி(அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயும் கந்தையா, ஜெகதீஸ்வரி, ஆனந்தன்(ஜேர்மனி), முருகேசு, கருணாகரன் (ஹொலண்ட்), சந்திரசேகரம்(அமெரிக்கா) ஆகியோரின் மாமியும் லண்டனில் வசிக்கும் பிரபாகரன் - வியாழினி, பிரதாபன் - சுரேகா, பிரமிளா - தயாமணிதீபன், பிரதீபன் - கார்த்திகா, பிரேமினி - அன்ரு, குமுதினி, யாதவன், மணிவண்ணன், ஜேர்மனியில் வசிக்கும் தாரணி - சுபாஸ்கரன், தசிந்தன்,கோகுலன்,அச்சுதன், அமெரிக்காவில் வசிக்கும் அனித்தா, டினேஷ், யாழினி(கனடா), சரணியா (ஹொலண்ட்), பிரபலோஜினி,(யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.), பிறேமவாசன் (பிரதேச செயலகம், தென்மராட்சி), முகுந்தன், யாகுலன் ஆகியோரின் பேர்த்தியும் லண்டனில் வசிக்கும் லக்கியா, நமேறா, வைஷ்கன், கனடாவில் வசிக்கும் அபிஷா, ரிஷான், பௌவினா(கொடிகாமம்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.08.2008)திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
சி.கந்தையா(மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் யுத்தக் கப்பல் ஜோர்ஜிய துறைமுகத்துக்கு வருகை



டிபிலிஸி,ஒக.25

ரஷ்யாவுக்கும் ஜோர்ஜியாவுக்குமிடையே சமீபத்தில் மூண்ட மோதல்களால் பாதிப்புக்குள்ளான ஜோர்ஜிய மக்களுக்கு விநியோகிப்பதற்கான நிவாரணப் பொருள்களுடன், நேற்று ஞாயிற்றுக்கிழமை அமெரிக்க யுத்தக்கப்பலொன்று, ஜோர்ஜியாவின் பதுமி துறைமுகத்தை வந்தடைந்தது.

ஜோர்ஜிய மக்களுக்கான அமெரிக்காவின் கடல் மார்க்கமான முதல் விநியோகம் இதுவாகும். பதுமியின் வடக்கே உள்ள இராணுவத் துறைமுகமான பொட்டி, இன்னும் ரஷ்யத்துருப்புகளின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளது என, ஜோர்ஜிய அரச வட்டாரம் குறிப்பிட்டது.

ஜோர்ஜியாவில் நிலைகொண்டுள்ள ரஷ்ய சண்டைப் படைகளில், ஒரு சிறு தொகையை மாத்திரமே ரஷ்யா மீளப்பெற்றுள்ளது. ஏனைய துருப்புகள் தொடர்ந்தும் நிலைகொண்டுள்ளன என்றும் அது சுட்டிக்காட்டியது. அதேவேளை எஞ்சிய அப்படைகளையும் வாபஸ் பெற்றுவிடுமாறு, ரஷ்யாவை பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் சர்கோஷி நிர்ப்பந்தித்து வருகிறார்.

ஜோர்ஜியாவை வந்தடைந்துள்ள யுஎஸ் எஸ் மெக்போல் என்னும் யுத்தக்கப்பல், போர்வைகள், உடைகள், குழந்தை உணவுகள் ஆகியவை உட்பட ஏராளமான இன்னபிற நிவாரணப் பொருட் களையும் கொண்டுவந்துள்ளது. இவ்வார பிற்பகுதியில் நிவாரணப் பொருள்களுடன் இன்னுமிரு அமெரிக்கக் கப்பல்களும் வந்தடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜோர்ஜியா, பிரிந்து சென்ற ஒசட்டியாவை மீளஇணைத்துக்கொள்வதற்காக, ஒகஸ்ட் 7 ஆம் திகதி தனது படைகளை அங்கு அனுப்பியது. அதையடுத்து, ஒசட்டியாவுக்கு ஆதரவான ரஷ்யாவுக்கும் ஜோர்ஜியாவுக்குமிடையே நடைபெற்ற நான்கு நாள்கள் மோதலில் அநேகர் கொல்லப்பட்டனர்.

இம் மோதலில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்தனர். மோதல்களின் போது நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளன. நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. ரஷ்யப்படைகள் வெளியேறத் தொடங்கியதும் அநேகர் முன்னைய இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர் என ஓரதிகாரி பி.பி.சி செய்திச் சேவைக்குத் தெரி வித்தார்.

## பாகிஸ்தான் ஜனதிபதி தேர்தலில் போட்டியிட அலி சர்தாரி சம்மதம்

இஸ்லாமாபாத், ஒக.25

எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறும் பாகிஸ்தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட பாகிஸ்தான் மக்கள் கட்சியின் இணைத்தலைவர் அஷிப் அலி சர்தாரி முன்வந்துள்ளார். ''நிர்வாகக் குழு கூடி, கட்சியின் சார்பாக என்னை ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளராக தெரிவு செய்துள்ளது. அம்முடிவை நான் மனப்பூர்வமாக ஏற்கிறேன்'' என அவர் நேற்று ஆதரவாளர்கள் மத்தியில், கரகோஷங்களுக்கிடையே அறிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக தமது முடிவை வெளியிட, சர்தாரி முன்னர் 24 மணி நேர கால அவகாசம் கேட்டிருந்தார். இந்நிலையில் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டம் வெள்ளிக்கிழமை, இஸ்லாமா பாத்திலுள்ள கட்சித்தலைமையகத்தில் கூடியது.

இக்கூட்டத்தில் ஜனாதிபதிதேர்தல் வேட்பாளராக, ஏகமனதாக, கட்சி இணைத்தலைவர் அஷிப் அலி சர்தாரியே தெரிவு செய்யப்பட்டார். எனினும் தாம் கூறியபடி சர்தாரி சனிக்கிழமை தமது முடிவைத் தெரிவித்துக்கொண்டார். நிர்வாகக்குழு முடிவே தமது முடிவென அவர் தெரிவித்தார்.

# ஒபாமாவுக்குப் பிடித்த ரொட்டி, பருப்புக் குழம்பு



வாஷிங்ரன், ஒக.25

''மைதா மாவில் தயாரிக்கப்படும் ரொட்டி, பருப்பு குழம்பு போன்ற தெற்காசிய உணவுகள் மீது எனக்கு அலாதிப்பிரியம். அவற்றை விரும்பி உண்பேன்'' என அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பராக் ஒபாமா தெரிவித்தார்.

தெற்காசிய நாடுகளைச்சேர்ந்தவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி திரட்டல் கூட்டமொன்றில் கலந்து கொண்டு, ஒபாமா உரையாற்றினார் அவர் தமது உரையில் கூறியவை வருமாறு:-

''தெற்காசிய நாடுகளுக்கும் எனக்குமிடையே நெருங்கிய தொடர்பு உண்டு. அதனை எவராலும் பிரிக்க முடியாது. அவர்களது கலாசாரம் எனக்கு நன்கு தெரியும். அது உன்னதமானஇங்கிதமானகலாசாரம்.

''நான் கல்லூரியில் படித்த காலத்தில் விடுதியில் தங்கியிருந்தேன். என்னுடன் தங்கியிருந்தவர்களில் பெரும்பாலானோர் பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். தெற்காசிய நாடுகளின் உணவுகளான மைதா மாவு ரொட்டி, பருப்பு குழம்பு ஆகியவை எனக்கு மிகவும் பிடிக்கும்.

இவற்றை சுவைத்து உண்பேன். இவற்றைத் தயாரிக்கும் முறையையும் கற்றுக் கொண்டேன். இப்போது என்னாலும் மைதா மாவு ரொட்டி தயாரிக்க முடியும். அதற்கேற்ப பருப்பு குழம்பும் சுவையாக தயாரிக்க இயலும். தொடர்ந்தும் நான் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தவர்களோடு பழகிவருகின்றேன்''- என்றார்.

# ரூ.800 கோடிக்கு உயர்ந்த டாவின்சியின் ஓவியம்

லண்டன்,ஒக.25

ஏலத்தில் வெறும் எட்டு இலட்சம் ரூபாவுக்கு விற்பனையாகலாம் என எதிர்பார்க்கப்பட்ட ஓர் ஓவியம் தற்போது 800 கோடி ரூபா மதிப்பு வாய்ந்தது என கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஓவியம் உலகப்புகழ் பெற்ற ஓவியர் லியானார்டோ டாவின்சியினால் தீட்டப்பட்டது என்ற கண்டுபிடிப்பே இதற்குக் காரணமாகும்.

இது திருமணத்துக்குத் தயாராகும் ஓர் இளம் பெண்ணின் ஓவியம். ஆரம்பத்தில் இந்த ஓவியத்தை ஜெர்மனி ஓவியரொருவர் தீட்டியிருக்கலாம் எனக் கருதப்பட்டது. இது தொடர்பான ஆய்வில் இக்கருத்து எடுபடவில்லை. எனினும் இது எட்டு லட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்பனையாகலாம். இதற்கு அந்தப் பெறுமதியே உண்டு.



இதற்குப் பின் மேற்கொள்ளப்பட்ட பிறிதோர் ஆய்வு ஓராண்டு வரை நீடித்தது. ஓவிய நுட் பங்கள், முறைமை, படைக்கப்பட்ட காலக்கணிப்பீடு ஆகியவை நுணுக்கமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இறுதியில் இது உலகப்புகழ் பெற்ற ஓவியர் லியானார்டோ டாவின்சியால் படைக்கப்பட்டதென்றுநிரூபிக்கப்பட்டது.

500 ஆண்டுகால பழைமை வாய்ந்த இந்த ஓவியம், 800 கோடி ரூபா மதிப்புடையது என தற்போது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

# புலிகளுடன் தொடர்பற்ற தமிழர்களையும் சுட்டுக்கொல்கிறது இலங்கை இராணுவம்

## தமிழகம் சென்ற அகதிகள் தெரிவிப்பு

மண்டபம், ஒக. 25

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பில்லாத தமிழர்களையும் இலங்கை இராணுவத்தினர் கண்மூடித்தனமாகச் சுட்டுகொல்லுகின்றனர்.

- இவ்வாறு இலங்கையிலிருந்து தமிழகம் சென்ற அகதிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையிலுள்ள வவுனியா, மன்னார் பகுதிகளிலிருந்து ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 10 அகதிகள் தனுஷ்கோடிக் கடற்கரையில் வந்திறங்கினர்.

இவர்களில் சேது ராம் என்ற அகதி கூறுகையில் - வவுனியாவில் தையல் கடை வைத்துள்ளேன். எங்கள் பகுதி இலங்கை இராணுவத்தின் கண்காணிப்பில் உள்ளது. இரவில் வெடிகுண்டுச் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். இலங்கை இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பில்லாத தமிழர்களையும் சுட்டுக்கொல்கின்றமை தொடர்கிறது.

சமீபத்தில் ஜெகதீஸ் என்பவர் அடையாளம் தெரியாத சிலரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது உடலைப் பார்ப்பதற்கு இலங்கை இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை. ஜெகதீஸின் மனைவி புனிதாவிடம் இறந்துபோன அவரது கணவர் விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று எழுதிக் கையொப்பம் வாங்கிய பின்புதான் உடலை ஒப்படைத்தனர்.

புலிகளுக்குத் தற்போது பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. புலிகளின் கண்காணிப்பிலுள்ள பகுதிகளை இலங்கை இராணுவம் கைப்பற்றி வருகிறது. ஆயுதங்களும், ஆள்களும் புலிகளுக்குத் தேவைப்படுவதால் தமிழ் இளைஞர்களை இயக்கத்தில் சேரவேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்றனர்- என்று கூறினார்.

# தமிழக எல்லையில் துப்பாக்கிகள் தயாரிப்பு; சிறப்புப் பொலிஸ் குழு தீவிர கண்காணிப்பு

தேவாரம், ஒக. 25

தமிழக -கேரள எல்லையை ஒட்டிய வனப்பகுதியில் கள்ளத்துப்பாக்கி தயாரிப்பு, குடிசைத் தொழிலாக நடைபெற்று வருகிறது என்றும் இவர்கள் தமிழகத்திற்குள் துப்பாக்கிகளை விற்பனை செய்வதால் கேரளப் பொலிஸார் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றனர் என்றும் தமிழக நாளேடு செய்திவெளியிட்டுள்ளது.

மேலும் இதுதொடர்பாகத் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

தேனி மாவட்டத்தை ஒட்டி அமைந்துள்ள கேரள வனப்பகுதியில் கள்ளத்துப்பாக்கித் தயாரிப்பு சில குடும்பத்தினரால் குடிசைத் தொழில்போல் நடத்தப்பட்டு வருகிறது.

துப்பாக்கி குழாய் செய்ய பழைய இரும்புக் கடைகளில் இருந்து லொரி, பஸ்களின் 'ஸ்டியரிங்' ரொட்டுகள் வாங்கப்படுகின்றன.

போடிமெட்டி அருகே பூப்பாறை, உடும்பஞ்சோலை, செம்மனாறு, சாக்குலூத்து மெட்டி பகுதியைச் சேர்ந்த பல குடும்பத்தினர் பரம்பரையாக கள்ளத்துப்பாக்கி தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் பற்றிய விவரம் கேரளப் பொலிஸாருக்குத் தெரிந்திருந்தாலும் துப்பாக்கிகளைத் தமிழகப் பகுதியில் விற்பதால் நடவடிக்கை எடுக்காமல் உள்ளனர். தாராளமாகக் கிடைக்கும் கள்ளத்துப்பாக்கிகள் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டதா என்று எஸ்.ஐ. முத்துபிரேம் சந்த் தலைமையிலான சிறப்புப் பொலிஸ் குழு விசாரித்து வருகிறது.

## ஏழு ஆண்டுகளில் 76 விருதுகள்; 11 வயது மும்பைச் சிறுமி சாதனை

மும்பை, ஒக. 25

11 வயது மும்பை சிறுமியான ஸ்வரளி சோதனோர் என்பவர் ஏழு ஆண்டுகளில் 76 விருதுகள் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

தேசியக் குழந்தைகள் விருதுக்காக இவரது பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நவம்பர் 14ஆம் திகதி இவ்விருது ஸ்வரளிக்கு அளிக்கப்பட்டால், அது 77ஆவது விருதாக இருக்கும்.

மும்பையைச் சேர்ந்த இச்சிறுமி, பல துறைகளிலும் ஆர்வம் கொண்டுள்ளார். ஆனாலும், இசை என்றால் இவருக்கு உயிர். நான்கு வயதில் இசை கற்கத் தொடங்கினார். ஏழு ஆண்டுகளில், பல்வேறு இசைப் போட்டிகளில் ஏராளமான விருதுகளைக் குவித்துள்ளார். இது மட்டுமன்றி, ஆங்கிலம், மராத்தி, சமஸ்கிருதம், ஒப்புவித்தல், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளிலும் விருதுகளைக் குவித்துள்ளார். ஏழு ஆண்டுகளில் நகர, மாவட்ட, மாநில அளவில் நடந்த பல்வேறு போட்டிகளில் 76 விருதுகளைக் குவித்துள்ளார்.

# எயிட்ஸ் விழிப்புணர்வை ஏற்படுத்த மொபைல்களில் 'கொண்டொம் ரோன்'

புதுடில்லி, ஒக.25

மொபைல் போன்களில் எய்ட்ஸ் மற்றும் பாதுகாப்பான உடலுறவு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கையாக, கொண்டொம் ரிங்ரோன்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

15 வயது முதல் 35 வயதுக்கு உட்பட்டோரிடம் பாதுகாப்பான உடலுறவு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. பொலிவூட்டில் பிரபலமாக உள்ள நடிகர்கள், இசையமைப்பாளர்கள், பாடலாசிரியர்கள், இயக்குநர்கள் மூலம், குறும் படங்கள், விழிப்புணர்வுப் பாடல்கள் போன்றவை தயாரிக்கப்பட்டு வருகின்றன. தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டுக் கழகத்தின் சார்பில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வரிசையில் தற்போது மொபைல் போன் ரிங் ரோன்களும் பாதுகாப்பான உடலுறவு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி

# நேற்று நடந்த கரப்பந்தாட்டப் போட்டிகளில் பெண்கள் அணிகள் சகல பிரிவுகளிலும் வெற்றிவாகை

## ஆண்கள் பிரிவில் மானிப்பாய் இந்து இரண்டாமிடம்

வவுனியா, ஓக 25

வவுனியாவில் நடைபெற்று வரும் மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்களில் பெண்கள் பிரிவில் சகல பிரிவுகளையும் யாழ்.பாடசாலைகள் அள்ளிக் கொண்டன.

வவுனியா தமிழ் மகாவித்தியாலய ஆடுகளத்தில் நேற்று ஆண்கள், பெண்கள் பிரிவுகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இடம்பெற்றன.

ஆண்கள் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் வவுனியா மடுகந்த மகாவித்தியாலயத்துக்கும் இடையிலான ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக அமைந்திருந்தது.

இரு அணிகளும் மாறி மாறி ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர் என்ற நிலையில் மோதினர்.

வவுனியா அணி 25 - 21, 25 - 23 என்ற நேர் கணக்கில் மானிப்பாயை வென்று சம்பியனானது. இரண்டாம் இடத்தை மானிப்பாய் இந்து பெற்றது.

பெண்கள் பிரிவில் இடம் பெற்ற இறுதியாட்டங்களில் வெற்றி பெற்ற அணிகள் வருமாறு:-

* 15வயதுப் பிரிவு- சங்கானை சிவப்பிரகாச ம.வி, அராலி கிழக்கு ஏ.எம்.ரி.எம். எஸ்.
* 17 வயதுப் பிரிவு - தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி, சங்கானை சிவப்பிரகாசம் ம.வி.
* 19வயதுப் பிரிவு- பண்டத்தரிப்பு உயர்தர மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

முதலிரு இடங்களையும் பெறும் அணிகள் தேசிய மட்டப் போட்டியில் பங்கு பற்ற தகுதி பெற்றுள்ளன.

(அ-01)

## துணுக்காயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டார். இன்னொருவர் படுகாயமடைந் தார். மாலை 3.35 மணியளவில் நடத்தப் பட்ட மோட்டார் ஷெல் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றவர் படுகாயமடைந்தார். மாலை 6.20 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது. (சி)

## கடந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் ஊடாகவும் வன்முறையின் ஊடாகவும் வெற்றி பெற்றது.

பல மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுதான் அரசு இத்தேர்தலில் வெற்றிபெற்றது. ஆனால், நாம் நேர்மையான பிரசாரத்தின் ஊடாகவே வெற்றி பெற்றோம்.

எம்மைப் பொறுத்தவரை இத்தேர்தல் முடிவுகள் எமக்குத் தோல்வியைத் தரவில்லை - என்றார். (சி)

## படையினரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றேன். மிகவும் அமைதியான முறையில் இந்த வெற்றியைக் கொண்டாடுமாறு அம்மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வெற்றி மூலம் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் படையினரின் மனவலிமையைக் குறைக்கும் சிலரின் சதித்திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது.

நாம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்குமே முதலிடம் கொடுக்கிறோம். இத்தேர்தல் வெற்றியின் ஊடாக இந்நாட்டைப் பாதுகாக்கும் எமது போராட்டம் பலப்படுத் தப்படும்.

இந்தப் போராட்டத்தில் இணைய மறந்தவர்கள், இணைவதற்குத் தாமதமானவர் கள் அனைவருக்கும் கதவு திறந்தேயுள் ளது. அவர்கள் எந்நேரமும் எமது போராட் டத்தில் வந்து இணையலாம்- என்று குறிப்பிட்டுள்ளார்.

## மாகாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமே தவிர யுத்தத்திற்கு முடிவினைத் தராது என்பதை பெரும்பான்மைச் சமூகம் உணர்ந்துகொள்ளவேண்டும்.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தேர்தல்களில் அரசு வெற்றியடைந்துள்ளமை குறித்துக் கேட்டபோது அவர்மேலும் கூறியவை வருமாறு:-

இனவாதக் கருத்துக்களைப் பரப்பி புலிகளுக்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் தமிழர்களை அழித்தொழிப்பதற்காகவே சிங்களப் பேரினவாதிகளிடம் இருந்து அரசு இந்த சன்மானத்தைப் பெற்றிருக்கின்றது. தனது குறுகிய வெற்றியின் ஊடாக நீண்டகால வெற்றியைக் காண அரசினால் ஒருபோதும் முடியாது. எனவே, அரசியல் தீர்வு எட்டப்படாத வரையில் இந்த நாட்டுக்கு நிம்மதி ஏற்படப்போவதில்லை.

சிங்கள ஊடகங்களும் தமிழ் மக்களின் துன்ப துயரங்களை எடுத்துக் கூறுவதில்லை. வடக்கின் மீது தொடுக்கப்பட்டுள்ள போரினால் இலட் சக்கணக்கான தமிழர்கள் தமது வதிவிடங்களை இழந்து அகதிகளாக்கப் பட்டுள்ளனர். அனைத்து அத்தியாவசியத் தேவைகளுக்கும் அல்லாடிக்கொண்டிருக்கும் தமிழ்மக்களின் நிலைவரங்கள், சிங்களவர்களுக்கு மூடி மறைக்கப்படுகின்றன. இதுவே இன்றை யதார்த்தம் - என்றார்.

(சி)

## அறுதிப் பெரும்பான்மையுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வடமத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாணசபைகளின் 77 ஆசனங்களில் 45 ஐக் கைப்பற்றியுள்ளது.

வடமத்திய மாகாணசபையில் 20 ஆசனங்களையும் சப்பிரகமுவ மாகாணசபையில் 25 ஐயும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளதாகத் தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

வடமத்திய மாகாணசபையின் மொத்தம் உள்ள 33 ஆசனங்களில் ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 20 ஆசனங்களைப் பெற்றது.

சப்பிரகமுவ மாகாண சபையின் மொத்தம் 44 ஆசனங்களில் 25 ஆசனங்களை வென்றது.

இரண்டு மாகாணசபைகளிலும் அரசுத் தரப்பு கூட்டமைப்புக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்தது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி இரு மாகாண சபைகளிலும் சேர்த்து 29 ஆசனங்களைப் பெற்றுள்ளது. அக்கட்சிக்கு மொத்தம் 5 லட்சத்து 51 ஆயிரத்து 605 வாக்குகள் கிடைத்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி வடமத்திய மாகாணசபையில் 12 ஆசனங்களையும் சப்பிரகமுவ மாகாணத்தில் 17 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது.

இதேவேளை, இரு பிரதான கட்சிகளுக்கும் கடும் சவாலாக விளங்கும் என எதிர்பார்க்கப்பட்ட ஜே.வி.பியால் இரு சபைகளிலும் சேர்த்து மொத்தமாக மூன்று ஆசனங்களை மாத்திரமே பெற முடிந்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நான்கு மாவட்டங்களிலுமுள்ள 27 தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ள போதிலும், கடந்த முறையை விட ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிகளவு ஆசனங்களும், வாக்குகளும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும.

சப்பிரகமுவ மாகாண சபையில் போட்டியிட்ட இலங்கை தொழிலாளர்காங்கிஸும் மேலக மக்கள் முன்னணியும் மண்கவ்வின.

இது இவ்வாறிருக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றி குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன வட பகுதியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் முயற்சிக்கு கிடைத்த தோல்வியென இதனை வர்ணித்துள்ளார்.

இதேவேளை, ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன "பயங்கரவாதத்திற்கு முடிவுகட்டி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அரசின் முயற்சிக்கு கிடைத்த வெற்றியே இது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு நலன்புரி மற்றும் அபிவிருத்தி என்ற அரசின் கொள்கைகளை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். மக்களின் ஆணையை நிறைவேற்றுவது அரசின் கடமை என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்குத் தெளிவான அங்கீகாரமென முன்னாள் இராஜதந்திரியான நந்தா கே. கொடகே தெரிவித்துள்ளார்.

(அ-சி)

## கலிகையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த இருவர் உயிரிழக்க, மேலும் இருவர் படுகாயமடைந்தனர் என்று புலிகள் தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் சுமார் 15 நிமிடங்கள் வரை நீடித்தது என்று தகவல்கள் தெரிவித்தன.

காயமடைந்த படையினர் பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டனர்.

இச்சம்பவத்தை அடுத்து யாக்கரை மற்றும் கலிகைப் பகுதிகளில் துருப்புகள் குவிக்கப்பட்டு நேற்று மாலைவரை கடும் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை, இத்தாக்குதலை மேற்கொண்ட அணியினர் வெற்றிகரமாக தளம் மீண்டனர் என்றும் புலிகள் தரப்பில் மேலும் கூறப்பட்டது. (அ-சி)

## திடீர் பொதுத் தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும், தற்போது தேர்தல் நடந்த வடமத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகளை யும் விடுத்தால் எஞ்சியிருக்கும் ஐந்து மாகாண சபைகளிலும் அரசுக் கூட்ட மைப்பே இப்போது அதிகாரத்தில் உள்ளது.

ஆனால் அந்த மாகாணசபைகளுக்கு கடந்த தடவை தேர்தல் நடைபெற்றபோது அரசுக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய ஜே.வி.பி. உறுப்பினர்கள் பலரும் இப்போது அந்த மாகாணசபைகளில் அரசுப் பக்கம் இல்லை. அவர்கள் எதிரணித் தரப்பில் அமர்ந்துள்ளனர்.

இதனால் அந்த ஐந்து மாகாணசபைகளிலும் தனித்துப் பெரும்பான்மையை நிரூபிப்பதில் அரசுத் தரப்பு பலத்த நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது.

### நெருக்கடி வருமுன்னர் கலைத்துவிட யோசனை

இந்தப் பின்புலத்தில் இவ்வருட இறுதியில் அந்தந்த மாகாணசபைகளின் வரவு - செலவுத் திட்டங்களை அந்தந்த சபைகளில் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெறவேண்டிய இக்கட்டு அரசுத் தரப்பினருக்கு நெருங்கி வருகின்றது.

எதிர்த்தரப்பில் தற்போது அமர்ந்திருக்கும் ஜே.வி.பியினர் வரவு - செலவுத்திட்ட சமயத்தில் காலை வாரிவிடலாம் என்று கணிப்பிடும் அரசுத் தரப்பு, அத்தகைய நெருக்கடி ஏற்பட முன்னரே மாகாணசபைகளைக் கலைப்பது குறித்து ஏற்கனவே சிந்தித்து வருகின்றது என்ற செய்திகள் முன்னரே வெளியாகியிருந்தன.

தற்போது இரு மாகாணசபைகளுக்கும் நடந்த தேர்தலில் கிடைத்திருக்கும் காத்திரமான வெற்றி, மேற்படி ஐந்து மாகாண சபைகளையும் கலைத்துப் புதிய தேர்தலுக்கு உத்தரவிடுவதற்கான முடிவை மேற்கொள்ள அரசுத் தலைமையை ஊக்குவித்திருக்கின்றது என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அதேசமயம், வடக்கில் தான் மேற்கொள்ளும் யுத்த முனைப்புப் போக்குக்குத் தெற்கில் பேராதரவு கிட்டியிருப்பதையே தற்போதைய தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன என்று கருதும் அரசுத் தலைமை, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி, வலிமையான - தனக்குச் சாதகமான - நாடாளுமன்றம் ஒன்றை உருவாக்கலாம் எனத் திட்டமிடுகின்றது என்றும் கூறப்படுகின்றது.

### நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு...

அத்தகைய பொதுத் தேர்தல் அழைப்பு ஒன்றுக்கான வாய்ப்பு இருப்பதை, நேற்று இரு மாகாண சபைகளுக்கான தேர்தல் முடிவுகளை அடுத்து இலத்திரனியல் ஊடகம் ஒன்றில் நடந்த கலந்துரையாடலில் தகவல், ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனா கோடி காட்டினார்.

இந்தத் தேர்தல் முடிவுகள் அரசின் 'தேர்தல் கலண்டரை' மாற்றியமைக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது என்று குறிப்பிட்ட அவர், இச்சமயத்தில் நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்தால் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கூட அரசுக்குக் கிட்ட வாய்ப்பு இருப்பதாகச் சொன்னார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஒரே அணியாக அரசுப் பக்கம் தாவி அமைச்சர் பதவிகளைப் பெற்றவர்களில் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனாவும் ஒருவர். அவரே நாடாளுமன்றக் கலைப்பு மற்றும் பொதுத் தேர்தலுக்கான வாய்ப்புகள் குறித்து பிரஸ்தாபித்திருக்கின்றமை முக்கிய விடயம் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### அரசுத் தரப்புக்கு தாவியவர்கள் எதிர்ப்பு

ஐ.தே.கட்சி, இ.தொ.கா., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் பலர் தத்தமது கட்சி களை விட்டுக் குத்துக்கரணம் அடித்து, அரசுப் பக்கம் தாவி, அமைச்சர் பதவிகளைப் பெற்றிருந்தாலும் - விரைவில் பொதுத் தேர்தல் ஒன்று வருமானால் இவர்கள் அரசுப் பக்க வேட்பாளர்களாக நின்று அத்தேர்த லில் வெற்றிபெற வாய்ப்புகள் பெரும்பா லும் இல்லை என்றே கூறப்படுகின்றது. அதனால் இவ்வாறு அரசுப் பக்கம் பாய்ந்த எம்.பிக்கள் பலரும் உடனடி நாடாளுமன் றக் கலைப்பை எதிர்த்தே வருகின்றார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கருஜயசூரியா தலைமையில் ஐ.தே. கட்சியிலிருந்து அரசுப் பக்கம் தாவிய அமைச்சர்களான 17 பேரும் கூட இத்த கைய திடீர்த் தேர்தலை விரும்பவே யில்லை என்று கூறப்படுகின்றது. தேர்தல் ஒன்றை உடன் எதிர்கொண்டு, தங்கள் எம்.பி. பதவிகளைப் பறிகொடுப்பதையோ அல்லது அதற்கு வாய்ப்பளிப்பதையோ அவர்கள் அடியோடு விரும்பவேயில்லை என்பது அவதானிகளின் கருத்து.

அப்படி இருக்கையில், அந்த 17 பேரில் ஒருவரான அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனா, திடீர்ப் பொதுத் தேர்தல் நடக்க வாய்ப்புண்டு என்று கூறுமளவுக்கு வந்திருக்கின்றமை, இன்றைய அரசியல் சூழலின் யதார்த்தப் புறநிலைமை அவர்களின் விருப்புக்கும், இசைவுக்கும் மீறிச் சென்று, பொதுத் தேர்தலை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது என்ற உண்மையை அவர் புரிந்து கொண்டுள்ளார் என்பதையே காட்டுவதாக அவதானிகள் மேலும் குறிப்பிடுகின்றனர். (உ)

## அடுத்து வரும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட விரும்பாத ஆய்வாளர் ஒருவர், இல்லாவிட்டால் நவம்பர் மாத மழை, ஆட்டிலறி பீரங்கிகள் போன்ற கனரக ஆயுதங்களின் செயல்திறனைக் குறைத்து விடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### இராணுவம் ஆபத்தான சூதாட்டத்தில்

"இராணுவம் மிகவும் ஆபத்தான சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளது. கடந்த காலங்களைப் போன்று அகலக் கால் வைக்கும் தவறினை அது செய்கின்றது" - என்றும் அந்த ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதேவேளை, இராணுவத்தினர் சடுதியாக - வேகமாக - முன்னேறவில்லை. தாங்கள் தனிமைப்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கு அவர்கள் சிறந்த தந்திரோ பாயங்களை மேற்கொள்கின்றனர் எனத் தெரிவித்துள்ள ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி [illegible]டேஜ் இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் ஆளணிப் பற்றாக்குறைப் பிரச்சினை இருக்கின்றது தான் எனத் தெரிவித்துள்ளார்.

எனினும், இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும் இராணுவத் தலைமை நம்பிக்கை தெரிவிக்கின்றது.

### எதிர்கொள்ள முடியும் என்கிறார் இராணுவத் தளபதி

"நாங்கள் கிளிநொச்சியை நெருங்கி விட்டோம். எமது எதிர்கால இலக்குகள் கடினமாக காணப்படும் என்றாலும் அதனை எம்மால் எதிர்கொள்ள முடியும்" - என இராணுவத் தளபதி சரத் பொன்சேகா பத்திரிகையொன்றிற்குத் தெரிவித்துள்ளார்.

அரசு இடைக்கால நாடாளுமன்ற தேர்தலொன்றை நடத்துவதற்காக இராணுவ வெற்றியை நம்பியுள்ளதாக குறிப்பிட் டுள்ள அரச வட்டாரங்கள், நாடாளுமன்றப் பெரும்பான்மையை எய்துவதற்கு இது அவசியமானதாகவுள்ளதாக தெரிவித்துள்ளன.

எனினும், நீண்டகாலம் நீடிக்கும் மோதல், அரசின் இராணுவ நடவடிக்கைகளை மக்களின் ஆதரவில் பாதிப்பை ஏற்படுத்தும் என தெரிவித்துள்ள ஆசிய இராஜதந்திரியொருவர் அரசியல் தீர்வொன்றைக் காணுமாறு இந்தியா இலங்கைக்கு வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

உடனடி வெற்றி கிடைக்காவிட்டால் பொருளாதார நெருக்கடிகள் அரசுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

கணனிப் பயிற்சி Tel:0779672038 (Nallur,Jaffna.)
Laptop மூலமாக வீடுகளில் வந்து கற்பித்துக்கொடுக்கப்படும்
Photoshop CS3 - 10 Days
CorelDraw X4 - 1 Week
PageMaker 7.0 - 1 Week
Word - 10 Days
Excel - 1 Week
Access - 1 Week
P.Point - 2 Days
உங்கள் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும்.
Internet & Email - 1 Week
மாணவர்கள், தொழில்செய்வோர் மற்றும் அனைவரும் பயன் பெறலாம்.

ACA கோவில் வாசல் கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
பௌதிகவியல்
A/L 2009, 2010
சடப் பொருளியல்
WED:- 4.00 PM
திரு:- குமரன்
ஆரம்பம்:- 27.08.2008 (WED)

ESPECIALLY DESIGNED COURSE FOR KIDS
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
விசேட எழுதிய மாணவர்களுக்கான
கணினிப்பயிற்சி நெறிகள்
Level 1 to 4
புதிய பிரிவுகள் ஆரம்பம்
3ஆம் பிரிவு 25/08 at 2.30 p.m.
4ஆம் பிரிவு 27/08 at 9.00 a.m.
5ஆம் பிரிவு 31/08 at 11.00 a.m.
DMI COMPUTER EDUCATION
NO. 113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org